விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்

Thamil Naatham

புகைத்தலை தவிர்ப்போம்

இராகம் 01 | தாளம் 40 | வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 30 செவ்வாய்க்கிழமை (14.08.2012) | பக்கங்கள்: பதினாறு

# அமைச்சர் ரிசாட் பதியுதீனே என்னை அச்சுறுத்தினார்

## - மன்னார் நீதிவான் சாட்சியம்

மன்னார் நீதிவான் ஏ. ஜுட்சனுக்கு அமைச்சர் ரிசாட் பதியுதீன் தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுத்தாரென்ற குற்றச்சாட்டு தொடர்பான வழக்கு நேற்று மன்னார் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த வழக்கை விசாரணை செய்த இரகசியப் பொலிஸார் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பித்த அறிக்கையில் சந்தேக நபராக எவரையும் குறிப்பிடாமல் அறிக்கை சமர்ப்பித்தது ஏன் என்று வழக்கை விசாரித்த நீதிபதி கேள்வி எழுப்பினார். அச்சுறுத்தலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் தொலைபேசி இலக்கத்தின் உரிமையாளர் யாரெனத் தெரிந்த பின்பும் இரகசியப் பொலிஸார் சந்தேக நபராக எவரையும் அறிக்கையில் குறிப்பிடாதது ஏன் என நீதிவான் கேள்வி எழுப்பினார்.

இந்த வழக்கு பாணந்துறை நீதிவான் திஸாநாயக்கவினால் மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அமைச்சர் ரிசாட் பதியூதீனை எதிர்வரும் 27 ஆம் திகதி மன்னார் நீதி மன்றில் ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த விசாரணையின்போது அமைச்சர் ரிசாத் பதியுதீனினால் அச்சுறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் மன்னார் நீதிவான் ஏ.ஜுட்சன் நீதிவான் திஸாநாயக்க முன்னிலையில் தோன்றி சாட்சியமளித்தார். தன்னை அமைச்சர் ரிசாத் பதியுதீன் 02



சுவாஸிலாந்து மன்னர் மும்ஸ்வதி III மூன்று நாள் உத்தி யோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று மாலை 3 மணிக்கு இலங்கையை வந்தடைந்தார். இவரை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் உள்ளிட்ட அதிகாரிகள் வரவேற்றனர்.

## தமிழ் கூட்டமைப்புடன் நாளையே பேச்சுக்குத் தயார் என்கிறார் பீரிஸ்

நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றினை அமைப்பதன் மூலம் வேண்டுமானால் நாளையிலிருந்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாரென்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்றுத் தெரிவித்தார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன் வெளிநாடுகளுக்குச் சென்று அரசாங்கத்துக்கு எதிராகப் பொய்ப் பிரசாரங்களைச் செய்துவருகிறார் என்றும் அமைச்சர் பீரிஸ் கூறினார்.

## இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை: விரைவில் உயரதிகாரிகள் பேச்சுவார்த்தை



இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பில் எதிர்வரும் சில வாரங்களில் இலங்கை, இந்திய உயர் மட்ட அதிகாரிகள் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தவிருப்பதாக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று யாழ்ப்பாணத்தில் கூறினார்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்தியாவின் வர்த்தக, கைத்தொழில் மற்றும் புடவைத்துறை அமைச்சர் ஆனந் சர்மாவுடன், மீனவர் பிரச்சினை குறித்துத் தான் கலந்துரையாடியதாகச் சுட்டிக்காட்டிய அமைச்சர், இவ்விடயம் தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்வதாக ஆனந்த் சர்மா உறுதியளித்ததாகவும் கூறினார்.


இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் யாழ். கடற்பிராந்தியத்தில் இடம்பெறும் தடை-செய்யப்பட்ட மீன்பிடிகள் 02

## மின்சார சபைக்கு 5000 பேரை இணைக்க திட்டம்

சேவை அவசியம் கருதி தற்காலிகமாக 5000 பேரை சேவையில் இணைத்துக் கொள்ள தீர்மானித்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இது குறித்து ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் உப தலைவர் அநுரவிஜேபால நேற்று (13) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார். 02

## தமிழ் மக்களின் பிரச்சினை தீர்வு சர்வதேசத்திடம் சென்றுவிட்டது



"மாகாண சபை முறைமையை சரியான அரசியல் தீர்வாக ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால், இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் நீண்டகால அபிலாஷைகளுக்கு நிரந்தரமானதும் நியாயமானதும் நிலைத்து நிற்கக்கூடியதமான அரசியல் தீர்வு ஒன்றை காணுவது தொடர்பான நடவடிக்கை நாட்டின் எல்லையை தாண்டி சர்வதேசத்தின் பார்வைக்கு சென்றுவிட்டது" என தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

முறையான அரசியல் தீர்வு ஒன்றை காணவேண்டிய பொறுப்பிலிருந்து இலங்கை அரசாங்கம் தப்பிச்செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

திருகோணமலை, உவர்மலை குமணன் விளையாட்டு கழக மைதானத்தில் 02

## ஜனாதிபதிக்கு ஆனந்தசங்கரி கடிதம்



ஒரு மாதத்துக்கு மேல் நினைவு திரும்பாத நிலையில் இருந்து கடந்த ஏழாம் திகதி மரணமான மரியதாஸ் டெல்றொக்ஷன் என்ற தமிழ் கைதியின் விவகாரம் தொடர்பாக ஆணைக் குழுவொன்றினை நியமித்து விசாரணை நடத்துமாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி. ஆனந்தசங்கரி ஜனாதிபதியைக் கேட்டுள்ளார். 'மகர சிறைச் சாலைச் சம்பவம் தொடர்பாக 02

## டெசோ மாநாடு வெற்றியாம் கருணாநிதி பெருமிதம்

பல்வேறு சிக்கல்களுக்கிடையில் சென்னையில் நடத்திய 'டெசோ' மாநாடு பெரும் வெற்றி எனவும் அது ஈழத் தமிழர்களின் நலன்களை மேம்படுத்தும் வகையில் அமைந்திருந்ததாகவும் தி.மு.க. தலைவர் கருணாநிதி, வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருக்கிறார்.

தனி ஈழம் குறித்து இலங்கைத் தமிழரிடையே 02

## பாரபட்சமற்ற விசாரணையே ஒரே வழி

இலங்கையில் யுத்தக்குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமானால் ஐ.நா.தலைமையிலான பாரபட்சமற்ற விசாரணையே ஒரே வழி என்று சர்வதேச மன்னிப்புச்சபையின் இந்தியக் கிளைத் தலைவர் அனந்தபத்மநாபன் 02

## அட்டாளைச்சேனையில் பதற்றம்: வேட்பாளர் உதுமாலெப்பையின் காரியாலயங்கள் சேதம்



ஐக்கிய மக்கள் சுதந்தர கூட்டமைப்பு வேட்பாளரின் தேர்தல் காரியாலயம் ஒன்று நேற்று திங்கட்கிழமை இரவு ஏழு மணியளவில் சிலரால் தாக்கப்பட்டு சேதமாக்கப்பட்டதோடு, மற்றொரு காரியாலயம் தீ வைத்துக் எரிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சரும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் அதாவுல்லா சார்பாக 02

## மன்னார் உப்புக்குளம் பிரச்சினை: 4 செய்தியாளர்களுக்கு கொலை மிரட்டல்

மன்னார் மாவட்ட ஊடகவியலாளர்கள் நான்கு பேர் தமக்குத் தொடர்ந்தும் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டு வருவதாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

மன்னார் உப்புக்குளம் கோந்தைப்பிட்டியில் அமைந்துள்ள மன்னார் ஜோசப்வாஸ் நகர் மீனவர்களுடைய வாடிகள் உடைக்கப்பட்ட சம்பவம் மற்றும் மன்னார் நீதிமன்றம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் ஆகிவற்றின் எதிரொலியாக மன்னார் மாவட்ட ஊடகவியலாளர்கள் நான்கு பேருக்குத் தொடர்ந்தும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை மாலை மன்னார் பொலிஸ் நிலை 02

# கொடிகாமம் பொலிஸில் இரு பாலியல் குற்றச்செயல்கள் பதிவு

வலிகாமம்

கொடிகாமம் பொலிஸ் பகுதியில் கடந்த வாரம் இரண்டு பாலியல் குற்றங்கள் இடம் பெற்றுள்ளதாக முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.

தனிமையில் ஆட்கள் அற்ற பாதை வழியாக பயணம் செய்த 23 வயது இளம் பெண் ஒருவர் கத்திமுனையில் பயமுறுத்தப்பட்டு பற்றைக்கள் இழுத்துச் செல்லப்பாட்ட இளைஞர் ஒருவரினால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிசில் முறையிடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட யுவதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர் கைது செய்யப்படவில்லை. பொலிஸார் மேலதிக விசாரணை

மற்றுமொரு சம்பவத்தில் 15 வயது சிறுமி காதல் என்ற பெயரில் பாலியல் துஷ்பிர யோகத்துக்கு உட்படுத்தப் பட்டதாக பொலிஸில் பெற்றோர் களினால் முறையிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சிறுமிக்கும் இளைஞர் ஒருவருக்கும் இடையே காதல் தொடர்பு இருந்து வந்ததாகவும் பின்னர் குறிப்பிட்ட இளைஞர் சிறுமியை பாலியல் துஷ்பிர யோகத்துக்கு உட்படுத்தியாதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஜனாதிபதிக்கு... (தொடர்)

விசாரிக்க ஆணைக்குழு நியமித்தல்' என்ற தலைப்பில் ஜனாதிபதிக்கு ஒரு நீண்ட கடிதத்தை ஆனந்தசங்கரி அனுப்பிவைத்துள்ளார்.

## செய்தியாளர்களுக்கு... (தொடர்)

யத்துக்குச் சென்ற குறித்த ஊடகவியலாளர்கள் மன்னார் தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துஸார தலுவத்தவைச் சந்தித்து தமது பிரச்சினைகள் தொடர்பாகத் தெரியப்படுத்தினர்.

தமது முறைப்பாட்டில் ஊடகவியலாளர்கள் தெரிவிக்கையில்,

கடந்த மாதம் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மன்னார் உப்புக்குளம் கோந்தைப்பிட்டி மீன் பிடி இறங்கு துறைமுகத்தில் அமைந்துள்ள மீனவர்களின் வாடிகளை உப்புக்குளம் மக்கள் உடைந்து சேதப்படுத்தியமை,அதனைத் தொடர்ந்து கடந்த 16 ஆம் திகதி உப்புக்குளம் மக்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டம்,கடந்த 18 ஆம் திகதி உப்புக்குளம் மக்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் மற்றும் நீதிமன்றம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் தொடர்பிலும் அவ்விடயம் தொடர்பில் சம்பவ இடங்களில் நின்று செய்தி சேகரித்த தமக்கே ஆர்ப்பாட்டக்காரர்கள் குழுவென்றினால் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக குறித்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவங்கள் தொடர்பில் தொலைக்காட்சி, பத்திரிகை மற்றும் இணையங்களில் வெளியாகிய செய்திகள் தொடர்பிலேயே குறித்த ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தப்பட்டு வருவதாக குறித்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.மன்னார் மாவட்ட ஊடகவியலா ளர்களான ஏ.எஸ். எம்.பஸ்மி, ஏ.ரி. மார்க், என்.ஜே. பெலிஸ்ரஸ் பச்சக், எஸ்.ஆர்.லெம்பேட் ஆகிய நான்கு பேருக்குமே மன்னார் பொலிஸார் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த 31 ஆம் திகதி மன்னார் சந்தைக்கட்டிடப் பகுதியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு முன்னாள் மன்னார் பிரதேச ஊடகவியலாளர் ஒருவர் பொலிஸ் அதிகாரி ஒருவரால் கடுமையாக அச்சுறுத்தப்பட்டமை தொடர்பிலும் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## பாரபட்சமற்ற விசாரணையே... (தொடர்)

கூறியுள்ளார். இந்தத் தகவல் இந்தியாவிலிருந்து வெளிவரும் 'த ஹிந்து' ஆங்கிலப் பத்திரிகையில் வெளியாகியுள்ளது. பாரபட்சமற்ற விசாரணையை நடத்த வேண்டிய பாரிய பொறுப்பு இலங்கை அரசாங்கத்துக்கு இருப் பதாகவும் அவர் சொன்னார்.

# பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்குத் தெரிவான பட்டதாரிகள்

சண்டிலிப்பாய்

பட்டதாரிப் பயிலுநர்களில் இருந்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்குத் தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்களின் பெயர், விபரங்களை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வெளியிட்டுள்ளது.

கடந்த மாதம் பட்டதாரிப் பயிலுநர்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புவதற் காக நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளித்திருந்தனர்.

இவ் நேர்முகத் தேர்வின் அடிப்படையில் பிரதேச செயலகங்கள் ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்களின் விபரங்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் பிரதேச செயலகங்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# நல்லூரில் நேர்த்திக்கடன் செய்யும் அடியார்களுக்கு

நல்லூர் தேர், தீர்த்தத் திருவிழாக் காலங்களில் வீதி வலம் வரும் சுவாமி காலை 9.00 மணிக்கு ஆலயத்தினுள் சென்ற பின்னரே நேர்த்திக்கடன் செய்ய வரும் அடியார்கள் வீதித் தடையிலிருந்து உள்ளே வர அனுமதிக்கப்படுவார்கள் என்று யாழ் மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அறிவித்துள்ளார்.

இத்தினங்களில் நேர்த்திக்கடன் செலுத்த வரும் அடியார்களை காலை 9.00 மணியளவில் வீதித் தடையை வந்தடையுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## மின்சார...(தொடர்)

இலங்கை மின்சார சபை ஊழியர்களின் சம்பள உயர்வு குறித்து மூன்று நபர்கள்

அடங்கிய குழு அமைத்து ஆராய்ந்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

# மெனிக்பாம் நலன்புரி நிலையம் விரைவில் மூடப்படும்

முல்லைத்தீவு மாவட்டத்தில் எஞ்சிய பகுதிகளில் துரிதகதியில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன் ஒரு அங்கமாக புதுக்குடியிருப்பு மேற்கில் நாளையதினம் 300 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்படவுள்ளன. புதுக்குடியிருப்பு மேற்கில் வேணாவில் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் 300 குடும்பங்களைச் சேர்ந்த 974 பேர் நாளை தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்படவிருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மோகன்ராஜ் தெரிவித்தார். மெனிக்பார்ம் நலன்புரி நிலை யத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த இப்பகுதி மக்கள் அங்கிருந்து அழைத்து வரப்பட்டு கைவேலி கணேசா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம், மல்லிகைத்தீவு பகுதியைச் சேர்ந்த 174 குடும்பங்களைச் சேர்ந்த, 569 பேர் நேற்று மீளக்குடியமர்த்தப்பட்டனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அடுத்த கட்டமாக மந்துவில் அம்பலவன் பொக்கனை, கேப்பா விளவு ஆகிய இடங்களிலும், இறுதியாக ஆனந்தபுரத்திலும் மீள்குடியேற்றங்கள் இடம்பெறவுள்ளன. இப் பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் பெரும்பாலானவை முடிவுற்றுள்ளன. மீள்குடியேற்ற அமைச்சின் அனுமதியை எதிர்பார்த்துள்ளேன். அனுமதி கிடைத்ததும் இப்பகுதிகளில் மீள்குடியேற்றங்களை முன்னெடுக்க முடியுமென்றும் அவர் தெரிவித்தார்.

ஆனந்தபுரத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தின் மீள்குடியேற் றம் பூர்த்தியடைந்து விடும் என்றார்.

# தொலைபேசி திருட்டு: ஒருவர் கைது

வலிகாமம்

யாழ்ப்பாணம் பிரபல தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து மூன்று கையடக்கத் தொலைபேசிகள் காணாமல் போன சம்பந்தமாக யாழ்ப்பாணம் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து அந் நிறுவனத்தில் கடமையாற்றிய ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடம் இருந்து காணாமல் போனதாக கூறப்பட்ட கையடக்கத் தொலைபேசிகளையும் பொலிஸார் மீட்டுள்ளார்கள். கடந்த வாரம் இந்த மோசடி இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. விசாரணைகளின் அடிப்படையில் அந் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர் ஒருவரை விசாரணைக்கு உட்படுத்திய பொலிஸார் [illegible]ரிடம் இருந்து சுமார் இரண்டு இலட்சத்து பதினையாயிரம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலை பேசிகள் மீட்கப்பட்டனர்.

# தமிழிலும் புதிய நீதிவான்களுக்குப் பயிற்சி யாழ். நீதிவான் வழங்குவார்

புதிதாக நீதிபதிகளாகத் தெரிவு செய்யப்படவுள்ளவர்களுக்கு முதல்தடவையாக தமிழ்மொழி மூலம் பயிற்சியளிக்கப்படவிருக்கிறது.

பயிற்சி நடவடிக் கைகளைக் கையாள்வதற்காக யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராஜா கொழும்புக்குச் செல்லவுள்ளார். செப்டம்பர் மாதம் மூன்றாம் திகதி முதல் டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை இந்தப் பயிற்சிநெறி கொழும்பில் வழங்கப்படும்.

## தமிழ் மக்களின் ... (தொடர்)

கிழக்கு மாகாண சபை தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் திருமலை மாவட்ட வேட்பாளர்களை ஆதரித்து கடந்த சனிக்கிழமை மாலை நடத்தப்பட்ட பிரசார கூட்டத்தில் உரையாற்றும் போதே சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

கடந்த 60 ஆண்டுகளாக [illegible] மக்கள் நடத்தி வருகின்ற உரிமை போராட்டத்தில் கிழக்கு மாகாண சபை தேர்தலின் முடிவு நிச்சயம் ஒரு திருப்பு முனையாக அமைய போகின்றது என்பதை தமிழ் மக்கள் மனதிலிருத்தி செயற்'பட வேண்டும் என்றார்.

## அட்டாளைச்சேனையில் ... (தொடர்)

ஐக்கிய மக்கள் சுதந்தர கூட்டமைப்பில் போட்டியிடும் வேட்பாளருமான எம்.எஸ். உதுமா லெப்பையின் தேர்தல் காரியாலங்களே இவ்வாறு சேதமாக்கப்பட்டன.

நூற்றுக்கணக்கானோர் திரண்டு வந்து இக்காரியாலயத்தினைத் தாக்கி தளபாடங்களை சேதமாக்கியதோடு, அங்கிருந்த இரண்டு வாகனங்களையும் சேதப்படுத்தியுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு அக்கரைப்பற்று பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் வருகை தந்ததோடு, தாக்குதலை கட்டுப்படுத்தும் பொருட்டு பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளையும் வீசினர்.

ஊடனடியாக செயற்பட்டு பொலிஸார் நிலைமையை கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

## டெசோ மாநாடு... (தொடர்)

வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று மாநாடு வாயிலாக பிர-கடனப்படுத்துவோம் என முதலில் அறிவித்து, பின்னர் முன்னாள் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் அவரை சந்தித்துச் சென்ற பிறகு தனி ஈழம் கோரப் போவதில்லை, ஈழத்தமிழர் மறுவாழ்வு பற்றியே மாநாடு விவாதிக்கும் என்று கருணாநிதி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை - இந்திய மீனவர்...(தொடர்)

குறித்து யாழ் குடாநாட்டு மீனவர்களைத் தெளிவுபடுத்த வேண்டிய தேவை இருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

யாழ். குடாநாட்டில் 10 ஆயிரத்துக்கும் அதிகமான மீனவர் குடும்பங்கள் உள்ளன. இவர்களுக்கு தடைசெய்யப்பட்ட மீன்பிடி குறித்தும், மீன்பிடி தொடர்பில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும் சரியான வழிகாட்டல்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் அமைச்சர் சொன்னார்.

## அமைச்சர் ரிசாட் பதியுதீனே... (தொடர்)

அவர்களே தொலைபேசியில் தொடர்புகொண்டு அச்சுறுத்தியதாகவும், அவரது குரல் தனக்கு நன்றாகத் தெரியும் என்றும், இதற்கு முன்பும் அவர் தன்னுடன் தொலைபேசியில் உரையாடியுள்ளார் என்பதால் அவரது குரலை நன்கு அடையாளமம் காணக்கூடியதாக இருந்ததாகவும் நீதவான் ஜுட்சன் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இரண்டாம் முறையாக அமைச்சர் தன்னை அச்சுறுத்தியபோது, அவர் பேசியதை அந்த நேரம் தனது அருகில் இருந்த சட்டத்தரணிகள் சிலர் கேட்கும்படி செய்ததாகவும் குறிப்பிட்டார்.

இந்த வழக்கை விசாரணை செய்த இரகசியப் பொலிசார் சாட்சியமளிக்கையில், அமைசசர் ரிசாத் பதியுதீன், அவரது சகோதரர், மன்னார் நீதிவான் ஜுட்சன் ஆகியோரின் வாக்கு மூலங்களைத் தாங்கள் பதிவு செய்திருப்பதாகவும், தமது விசாரணைகளின் மூலம் அமைச்சருடைய சகோதரரே நீதவானுடன் தொலைபேசியில் பேசியதாகத் தெரியவந்துள்ளதாகவும் கூறியுள்ளனர்.

இரகசியப் பொலிஸார் நீதிமன்றதுக்குக் கையளித்துள்ள விசாரணைகள் தொடர்பான அறிக்கையில் எவரையும் பெயர் குறிப்பிட்டு சந்தேக நபராகக் குறிப்பிடாமல் இருந்ததை சுட்டிக் காட்டிய நீதவான் திசாநாயக்க அவர்கள், ஒரு விசாரணை அறிக்கையில் சந்தேக நபர் எவரையும் பெயர் குறித்து குறிப்பிடாமல் எவ்வாறு அறிக்கை சமர்ப்பிக்க முடியும் என கேள்வி எழுப்பியுள்ளார்.

அச்சுறுத்தலுக்குப் பயன்படுத்தப் பட்ட தொலைபேசியின் உரிமையாளர் யார் என்பது தெரிந்த பின்பும் ஏன் சந்தேக நபராக எவரையும் அறிக்கையில் சிஐடியினர் குறிப்பிடவில்லை என்றும் நீதவான் கேள்வி எழுப்பினார். நீதிமன்றத்தில் ஆஜராக உத் தரவு

பின்னர் வரும் 27 ஆம் திகதி அமைச்சர் ரிசாத் பதியுதீனை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அவர் உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கில் நீதவான் ஜுட்சன் தர்பபில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் உபதலைவர் கமகே, செயலாளர் அனோமா மற்றும் சிலர் உள்ளிட்ட 7 பேர் அடங்கிய சட்டத்தரணிகள் குழுவினர் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

எதிர்த்தரப்பினருக்காக சட்டத்தரணி சகீர் ஆஜராகியிருந்தார்.

மன்னார் நீதிமன்றத்தின் மீது கல்லெறிந்து தாக்குதல் நடத்திய தாக்குதல் நடத்திய வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 13 சந்தேக நபர்களும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர். ஆயினும் மன்னார் சட்டத்தரணிகளான நேரில் கண்ட சாட்சிகள் பெயர் குறிப்பிட்டு தெரிவித்திருந்த 27 பேரும் தலைமறைவாகியிருப்பதனால் அவர்களைத் தங்களால் கைது செய்ய முடியவில்லை எனக் கூறிய பொலிசார், அவரகளைக் கைது செய்வதற்காக நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்டிருந்த உத்தரவை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர்.

இதனையடுத்து கைது செய்யப்பட்டுள்ள 13 பேரையும் பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டும் என நீதிமன்றத்தில் செய்யப்பட்ட வாய் மொழி மூலமான பிணை விண்ணப்பத்தையடுத்து, எழுத்து மூலமாக விண்ணப்பம் செய்யுமாறு கூறிய நீதவான் திசாநாயக்க அவர்கள், இந்த வழக்கு தொடர்பில் தேடப்படுகின்ற 27 பேரையும் உடன-டியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டும் என பொலிசாருக்கு உத்தரவிட்டு வழக்கை வரும் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

# தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பின்னால் சர்வதேச சமூகத்தின் ஆதரவு உள்ளது



மக்களின் விருப்பங்களை நிறைவேற்றக்கூடிய முதலமைச்சரே கிழக்கு மாகாண சபைக்கு தேவையாகும். அதன் காரணமாகத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை காலை திருகோணமலை பிரதேசத்தில் உள்ள பொதுநல மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலில் உரையாற்றும்போதே சம்பந்தன் இதனைத் தெரிவித்தார்.

திருமலை நியூ சில்வர் ஸ்டார் ஹோட்டலில் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பான கொள்கை விளக்கக் கலந்துரையாடல் மற்றும் வேட்பாளர் அறிமுகமும் நடத்தப்பட்டது.

திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளையின் தலைவருமான க.துரைரெட்ண சிங்கம் தலைமை தாங்கினார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய சம்பந்தன் ஒருமித்த நாட்டுக்குள் நிலையானதும் நிலைத்து நிற்கக்கூடியதுமானதும் நியாயமானதுமான அரசியல் தீர்வு ஒன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி காணும்படி அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் நாடுகள் மற்றும் இந்தியா ஆகியன அரசாங்கத் துக்கு தெளிவாக வற்புறுத்தியுள்ளன.

சர்வதேச சமூகம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பின்னால் நிற்கின்றது என்பது இலங்கை அரசாங்கத்திற்கு நன்றாக தெரியும். இந்த நிலையில் தான் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் தமக்கு பின்னால் அணிதிரண்டு நிற்கின்றார்கள் என்பதை காட்டி சர்வதேச சமூகத்தை திசை திருப்பும் நோக்குடன் கிழக்கு மாகாண சபைத் தேர்தலை ஒரு வருடத்திற்கு முன்பதாக இலங்கை அரசாங்கம் நடத்துகின்றது.

கிழக்கு மாகாண தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தனிப்பெரும் கட்சியாக எதிர்வரும் தேர்தலில் தெரிவு செய்வதன் மூலம் முறியடிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

திருமலை மாவட்ட முதன்மை வேட்பாளர் சி.தண்டாயுதபாணி மற்றும் வேட்பாளர்களான டாக்டர் திருமதி இந்துராணி தர்மராஜா, க.கோணேஸ்வரன், ச.அந்தோனிப்பிள்ளை, ந.குமணன், ஜெ.ஜெனார்த்தனன், கு.இரத்தினகுமார், ச.விஜேகாந்த் ஆகியோரும் உரையாற்றினர்.

## டிரக்டர் விபத்து: 17 பேர் காயம்

மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குறிஞ்சாமுனைப் பகுதியில் டிரக்டர் வாகனம் கவிழ்ந்ததில் 17 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 5.30 மணியளவில் காந்தி நகரில் இருந்து கன்னன்குடா நோக்கிச்சென்ற டிரக்டரே இவ்வாறு கவிழ்ந்துள்ளதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது 17 பேர் படுகாயமடைந்து தாண்டியடி கிராமிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக 10 பேர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களில் இருவர் ஆபத் தான நிலையில் உள்ளதுடன் ஏனையவர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.





அளவெட்டி மகாஜன சபை வளாகத்தில் சைவப்பெரியார் அமரர் செல்லப்பா மயில்வாகனத்தின் திருவுருவச் சிலையை அளவெட்டி மகாஜன சபைத் தலைவர் வை.சிவசுப்பிரமணியம் திரைநீக்கம் செய்துவைப்பதையும் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் மலர்மாலை அணிவிப்பதையும் படங்களில் காணலாம். (படம் : அளவெட்டி நிருபர்)

## குழந்தைக்கு விஷமூட்டிய தாய்

எட்டியாந்தோட்ட பிரதேசத்தில் தாய் ஒருவர் தனது குழந்தைக்கு விஷம் கொடுத்து தானும் விஷம் அருந்தி தற்கொலை செய்து கொள்ள முயற்சித்துள்ளார்.

இதில் விஷம் உடம்பில் பதிந்த குழந்தை கரவனெல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் உயிரிழந்துள்ளது.

ஒரு வயதும் 8 மாதங்களும் நிரம்பிய குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

விஷம் அருந்திய தாய் உயிர் பிழைத்துக் கொண்ட நிலையில் அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்த விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## துபாயில் ஐந்து இலங்கையர் கைது

[illegible]ாய், ஜீமெய்றாவிலுள்ள மருந்து கடையொன்றினுள் நுழைந்து மூன்று மடிக்கணினிகளை திருடியதாக கூறப்படும் ஐந்து இலங்கையர்கள் துபாய் குற்றவியல் நீதிமன்றில் விசாரணைக்குட்படுத்தப்படுகின்றனர்.

மேற்படி மருந்து கடையில் பணிபுரிந்து வந்தவர்களே இத் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. இவர்கள் மீது இரண்டு பாதுகாப்பு பெட்டகங்களை பழுதாக்கியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதில் ஒருவர் மடிக்கணினி-களை விற்க முயன்றபோது பிடிபட்டுள்ளார். வேறு கடைகளில் பல களவு களை செய்துள்ளதாக இவர் கூறியுள்ளார்.

## கலைஞர்களுக்கும் அடையாள அட்டை

உடுவில்

இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களம் கலைஞர்களுக்கு அடையாள அட்டை வழங்கவுள்ளது.

கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் 18 வருடத்திற்கு குறையாமலும் தொடர்ந்து கலைச் சேவையில் ஈடுபடும் சர்வதேச மற்றும் தேசிய ரீதியில் ஆக்கத் திறன்களுக்காக விருது மற்றும் பரிசுகளினைப் பெற்றவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விவரங்களை கலாசார அலுவல்கள் திணைக்களம், 8ஆம் மாடி செத்சிரிபாய, பத்தரமுல்ல என்ற முகவரியுடனோ அல்லது பிரதேச செயலக, மற்றும் மாவட்ட செயலக கலாசாரப் பிரிவுடனோ தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## எட்டாம் வகுப்பு மாணவி பி.எஸ்.சி. பட்டம் பெறப் படிக்கிறாள் இலங்கையில்!

கண்டியிலுள்ள கொழும்பு சர்வதேசக் கல்லூரியில் எட்டாம் வகுப்பில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் வைசியா பிரேமானந் என்ற மாணவி, தற்போது தகவல் தொழில்நுட்பத்தில் பி.எஸ்.சி. பட்டத்தைப் பெறுவதற்கான கல்வியையும் கற்றுக் கொண்டிருக்கிறார்.

ஏற்கனவே இந்தப் பட்டத்துக்கான முதலாவது வருடப் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளார். தற்போது படிப்பது எட்டாம் வகுப்பில். ஆனால் 2010ஆம் ஆண்டில் ஜீ.சி.ஈ. சா.த பரீட்சையில் ஆங்கில பாடத்துக்கு 'ஏ' தரச் சித்தி பெற்றுள்ளாள். தகவல் தொழில்நுட்பம் ஈ வர்த்தக பாடத்தில் டிப்ளோமா படிப்பையும் பூர்த்தி செய்துள்ளாள்.

இணையத்தளப் பொறியியலிலும் டிப்ளோமா பெற்றிருக்கிறாள் இந்தச் சிறுமிக்கு. சிங்களம், ஆங்கிலம், பிரெஞ், ஜேர்மன் மொழிகளிலும் எழுதவும், வாசிக்கவும் தெரியுமாம்.

## யாழ்.மாவட்டத்தில் கடந்த வாரம் 27 பேர் கைது

யாழ்.மாவட்ட பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற எட்டுக் குற்றச் செயல்களில் ஐந்து சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரோரா தெரிவித்தார்.

கடந்த வாரம் பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைக-ளின் போது நீதிமன்றங்களினால் பிடியானை பிறப்பிக்கப்பட்ட பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 27 பேர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

## எஸ்.எல்.பி.எல். மோசடி விவகாரம்: தொலைபேசி உரையாடல் தொடர்பில் விசாரணை

இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் கிடைக்கப் பெற்றுள்ள பதிவு நாடா (டேப் ரெக்கார்டர்) குறித்து சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலுடன் இணைந்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

கிரிக்கெட் இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் இடம் பெற்ற தொலைபேசி உரையாடல் ஒன்றை இரகசியமாக பதிவு செய்யப்பட்ட பதிவு நாடா (டேப் ரெக் கார்டர்) சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் மற்றும் பத்திரிகைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் தற்போது இடம் பெற்று வரும் ஸ்ரீலங்கா பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டிகளை கண்காணிக்க வந்துள்ள சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலின் ஊழல் எதிர்ப்பு மற்றும் பாதுகாப்பு பிரிவு அதிகாரிகளுக்கு கிடைக்கப் பெற்ற பதிவு நாடா (டேப் ரெக் கார்டர்) குறித்து சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது. இது குறித்து சர்வ தேச கிரிக் கெட் கவுன்ஸில் இலங்கை கிரிக் கெட் நிறுவனத் திடம் அறிவித்துள்ள நிலையில், மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

## இன்றைய இராசி பலன் (14.08.2012)

**நந்தன வருடம் ஆடித் திங்கள் 30 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**நட்சத்திரம்** : திருவாதிரை மாலை 5.45 வரை அதன்பின் புநர்பூசம்
**திதி** : துவாதசி முன்னிரவு 9.09 வரை அதன்பின் திரயோதசி
**சுபநேரம்** : 10.35 - 12.05 **இராகுகாலம்** : 3.05 - 4.35
(இந்த நேரங்கள் பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்)
**மேடம்** : பொருள் வரவு, மன அமைதி, தொழில் விருத்தி.
**இடபம்** : காரிய சித்தி, தனவரவு, குடும்ப சுகம்.
**மிதுனம்** : ரோக பயம், வீண் பழிகேட்டல், முயற்சி தடை.
**கடகம்** : காரிய நஷ்டம், கடன்படல், அலைச்சல் மிகுதி.
**சிங்கம்** : நற்காரிய செய்கை, நினைத்தவை நிறைவேற்றல், தெய்வ அனுகூலம்
**கன்னி** : தொழில் மாற்றம், முயற்சிக்கேற்ப பலன், சுப செலவு.
**துலாம்** : மனச் சந்தோஷம், பொருள் சேர்க்கை, தூர இடத்து நற்செய்தி
**விருச்சிகம்** : உடல்நலக் குறைவு, யோசனை மிகுதி, வாக்குவாதப
**தனுசு** : பணப்புழக்கம், நற்செய்கை, பங்குத் தொழில்விருத்தி.
**மகரம்** : வீண்பழிகேட்டல், பொருள் விரயம், மனக்குமுறல்.
**கும்பம்** : தனவரவு, பிரயாணசுகம், தெய்வ அனுகூலம்.
**மீனம்** : தொழில் விருத்தி, புதுமுயற்சி, தொழிலாளர்களால் நன்

**- ஜோதிடர் பால.இரத்தினவே**


# கிளிநொச்சியில் தந்தை செல்வா மன்றத்தின் வாழ்வாதார உதவிகள்

(கிளிநொச்சி)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கும்நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் கல்வி மற்றும் சமுதாய மனிதநேயப்பிரிவால் முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சி நகரில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலகத்தில் கிளிநொச்சி மாவட்ட தந்தை செல்வா நற்பணிமன்ற அமைப்பாளர் டாக்டர் கோவி.திருலோகமூர்த்தி தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமும் முன்னாள் கிளிநொச்சி எம்.பியுமான வீ.ஆனந்தசங்கரி வாழ்வாதார உத விகளை வழங்கிச் சிறப்பித்தார்.

யுத்த காலத்தில் கால்களை இழந்த யுவதிகளுக்கு கணினி இயந்திரம் மற்றும் பெண்களின் தொழில் முயற்சிக்காக தையல் இயந்திரம், சைக்கிள் திருத்தம் அமைத்தல், தையல் ஆடைத் தொழில் அபிவிருத்தி, கோழி வளர்ப்புத் திட்டம், மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப் பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.



நிகழ்வில் எஸ்.ஜீவன் நன்றி உரையாற்றினார்.

# முப்படைகளின் வாகனங்களும் சோதனையிடப்படும்

கடற்படை, விமானப்படை மற்றும் இராணுவத்துக்குச் சொந்தமான வாகனங்கள் அனைத்தும் மோட்டார் போக்குவரத்து சட்டத்தின் கீழ் பதியப்படவில்லை. ஆதலால் முப்படைக்கும் சொந்தமான வாகனங்களில் புகைச்சோதனையை முன்னெடுப்பதற்கான அதிகாரம் சுற்றாடல் அமைச்சு மற்றும் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் ஆகியவற்றுக்கு இல்லையென வாயு வள முகாமைத்துவ நிலையப் பணிப்பாளர் அனுர ஜெய திலக கூறினார்.

பொலிஸ் திணைக்களம் உட்பட சட்டரீதியாக கொள்வனவு செய்யப்பட்டு வீதியில் செலுத்தப்படும் அனைத்து வாகனங்களும் வருடாந்தம் புகைச் சோதனைக்கு உட்படுத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் முப்படைக்குரிய வாகனங்களிலும் புகைச் சோதனையிடுவதற்கான விசேட நடைமுறையொன்று பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து விரைவில் ஆரம்பித்து வைக்கப்படுமெனவும் அவர் கூறினார்.

# சட்ட விரோதமாக மீன் பிடித்த 37 சீனப் பிரஜைகள் மீது வழக்கு

கடந்தவாரம் கிழக்கு மாகாணத்தின் அறுகம்பே குடாவுக்கப்பாலுள்ள கடலில் கைது செய்யப்பட்ட 37 சீனப் பிரஜைகள் மீது இலங்கையின் விசேட பொருளாதார வலயத்தில் மீன்பிடித்தாரகள் என்ற குற்றச்சாட்டு சுமத்தப்படவுள்ளது. இவர்கள் பயணித்த இரண்டு படகுகளும் இலங்கையைச் சேர்ந்த அறுகம்பே மரைன் பிறைவேற் லிமிட்டற் என்ற கம்பனிக்கு சொந்தமானது. இந்தப் படகுகள் இரண்டும் மீன் பிடித் திணைக்களத்தில் பதிவு செய்யப பட்டிருந்தன. ஆனால் சீன மீனவர்கள் மீன்பிடி மற்றும் கடல் வளத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. இத்தக வலை மேற்படி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமான என்.டி. ஹெட்டியா ராச்சி தெரிவித்தார்.

கைதான அனைவரும் திருமலை மஜிஸ்திரேட் முன்னிலையில் கடந்த 7ஆம் திகதி ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களில் இரண்டு இலங்கையர்கள் தலா ஓர் இலட்சம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டனர். சீன மீனவர்கள் கொழும்பிலுள்ள சீனத் தூதுவரா லயத்திடம் கையளிக்கப்பட்டுள்ளனர்.

# மாகாண சபைத் தேர்தல் கடமைகளில் 20,000 பொலிஸார்

மாகாண சபை தேர்தல் பாதுகாப்பு வேலைகளுக்காக இருபதாயிரம் பொலிஸார் ஈடுபடவுளனர். மூன்று சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்களின் கணகாணிப்பில் பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்ன தெரிவித்தார்.

சிறிய சம்பவங்கள் சிலவற்றை விட வன்முறைகள் நடைபெற்றதாக தகவல்கள் இல்லையென் றும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்ன கூறினார்.



யாழ்ப்பாண பொதுநூலக நடமாடும் நூலக சேவை வாகனம் அண்மையில் யா/சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயத்திற்கு சென்றபோது அந்நூலகத்தின் மூலம் மாணவர்கள் நூல்களை எடுத்து வாசிப்பதனையும் அதிபர் இரா.ஜெயக்குமார், ஆசிரியர்கள் மற்றும் நூலக உத்தியோகத்தர்களையும் படத்தில் காணலாம்.

(உடுவில் நிருபர்)

# பெண்ணொருவர் ஒரு கோடி ரூபா நிதி மோசடி

சில வருடங்களுக்கு முன்னர் நுகேகொடையில் சக்வித்தி எனும் பெயரில் மற்றுமொரு மோசடி இடம்பெற்றது. அண்மையில் தொம்பே பகுதியில் பெண்ணொருவர் மக்கள் பணத்தை ஏப்பம் விட்டுள்ளார். 18 பேரிடம் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் நிதி மோசடி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண்ணொருவர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். தொம்பே கனேகொட பகுதியைச் சேர்ந்த இந்த பெண் 18 பேரிடம் 1,07,50,000 ரூபா நிதி மோசடி செய்துள்ளதாக தொம்பே பொலிஸ் நிலையத்தில் 18 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதனையடுத்து விசாரணை நடத்திய பொலிஸார் பெண்ணை கைது செய்து பூகொட நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தியபோது அவர் தலா 5 லட்சம் ரூபா இரு சரீரப் பிணைகளில் செல்ல அனுமதிக்கப்பட்டார். எனினும் அவரை பிணை எடுக்க எவரும் முன்வராத காரணத்தால் அப்பெண் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# இளைஞர் பரிமாற்றம்: கம்பஹா வாலிபர்கள் கிளிநொச்சியில்!

(கிளிநொச்சி)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் இளைஞர் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் கம்பஹா மாவட்டத்தில் இருந்து ஐம்பது இளைஞர், யுவதிகள் கிளிநொச்சி விவேகானந்தா நகருக்கு வருகை தந்தனர். தேசிய இளைஞர் சேவைகள் மன்றப் பணிப்பாளர் மற்றும் மன்ற உயர் அதிகாரிகளும் சமூகமாகியிருந்தனர். தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கிளிநொச்சி இளைஞர் கழகப் பிரதிநிதிகள், மன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

விவேகானந்தநகர் கிராம அலுவலர் சிவஞானசுந்தரமூர்த்தி, ஈ.பி.டி. பி.அமைப்பாளர் தவநாதன், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் தீபன் உட்பட பெருமளவு பொதுமக்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# கழுகுக் கண்கள்

அரசாங்கம் நாட்டு மக்களுக்கு நல்லாட்சி புரிவதற்கு உறுதுணை புரியும் பொறுப்பு அரச ஊழியர்களிடம் இருந்து வருகிறது. அரசாங்கமொன்று எவ்வளவுதான் மக்களுக்கு சேவை செய்வதற்கான உன்னத கொள்கைகளை நிறைவேற்றுவதற்கு தீர்மானம் எடுத்திருந்தாலும் அந்த செயற்பாடுகளில் வெற்றியும் தோல்வியும் அரச ஊழியர்களின் கையிலேயே இருக்கிறது.

இது பற்றி நான் பல அரசாங்கத் திணைக்களங்களுக்கு சென்று பார்த்து கேட்டறிந்த தகவல்களை இங்கு தருகின்றேன். நாட்டில் மேற்கொண்டு வரும் சிறந்த அபிவிருத்தி திட்டங்கள் எதிர்பார்த்ததை விட மாபெரும் வெற்றியடைந்ததற்கு அரசாங்கத் தலைவர்கள் மட்டுமன்றி, அரச ஊழியர்களின் தன்னலமற்ற, கடுமையான உழைப்பே பிரதான காரணமாகும்.

இன்று கொழும்பு நகரும், அதனை அடுத்துள்ள பிரதேசங்களும் சிங்கப்பூர், ஹொங்கொங் ஆகிய நாடுகளைப் போன்று அல்லது அவற்றை விட சிறப்பான முறையில் நவீன கட்டிடங்களும், பெருஞ்சாலைகளும், பூங்காக்களும், மின்விளக்குகளுடன் மாலைப் பொழுதில் ரம்யமாக மனதை குளிர வைக்கக் கூடிய வகையில் காட்சியளிப்பதற்கு, இவற்றை வடிவமைப்பதற்கு பின்னணியில் இருந்து அயராது உழைத்த அரச ஊழியர்களே காரணமாகும்.

கொழும்பு நகரையும் அதனைச் சார்ந்த பிரதேசங்களையும் நவீனமயப்படுத்தும் பணி வெற்றியடைவதற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் கடுமையான உழைப்பும் சிறந்த வழிகாட்டலும் பேருதவியாக அமைந்தது.

அரசாங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் அல்லது தலைவர் நேர்மையான, கடுமையான உழைப்பாளியாக இருந்தால் அவருக்கு கீழ் பணிபுரியும் உத்தியோகத்தர்களும், சிற்றூழியர்களும் கடமை உணர்ச்சியுடன் தங்கள் சேவையை நிறைவேற்றுவார்கள். அதே வேளையில் அசமந்தப் போக்கைக் கொண்ட ஒரு திணைக்களத்தின் பணிப்பாளர் தனது பொறுப்புக்களை சரியான முறையில் நிறைவேற்றாமல் இருந்தால், அவருக்கு கீழ் பணி புரியும் அதிகாரிகளும், சிற்றூழியர்களும் அவரைப் போன்றே தங்கள் கடமைகளை நல்ல முறையில் நிறைவேற்றாமல் இருப்பார்கள்.

இலங்கையிலும் இது போன்ற பொறுப்பற்ற விரல் விட்டு எண்ணக்கூடிய சில அரச உயர் அதிகாரிகள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் பொறுப்பற்ற முறையில் தங்கள் பணிகளை செய்யாதிருப்பதனால் அரசாங்கம் மக்களுக்கு சேவையை அளிப்பதற்கு முட்டுக்கட்டை ஏற்படுகிறது.

உயர்தரப் பரீட்சை முடிவுகளில் ஏற்பட்டுள்ள சில குறைபாடுகளுக்கும் அரசாங்க ஊழியர்களே காரணமாகும். அவர்கள் செய்த தவறுகளினால் இன்று அரசாங்கத்தின் மீதே மக்கள் அநாவசியமாக ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்தும் அவலநிலை தோன்றியுள்ளது.

தரம் குறைந்த பெற்றோல் சில காலத்திற்கு முன்னர் வாகனங்களுக்கு விற்பனை செய்யப்பட்டதனால் பல வாகனங்கள் பழுதடைந்தன. இதற்கான பொறுப்பும் அரசாங்கத்தின் மீதே சுமத்தப்பட்டது. அரசாங்கத்தின் அனுமதியின்றி சில உயர் அதிகாரிகள் தரம் குறைந்த பெற்றோலை இறக்குமதி செய்ததனால் தான் இந்நிலை ஏற்பட்டது.

அது போன்று சமீபத்தில் தரம் குறைந்த டீசலை இறக்குமதி செய்து வாகனங்களுக்கும், ரயில் என்ஜின்களுக்கும் விநியோகிக்கப்பட்டதனால் பல வாகனங்களும், இரயில் என்ஜின்களும் நடுவழியில் நின்றமையால் பெரும் பிரச்சினைகள் ஏற்பட்டன. இந்த குளறுபடிகளுக்கும் அமைச்சரோ, அரசாங்கமோ காரணமல்ல. சில பொறுப்பற்ற உயர் அதிகாரிகள் எடுத்த தவறான முடிவுகளே இந்த நெருக்கடியை அரசாங்கத்திற்கு தோற்றுவித்தது.

இப்போது இது குறித்து உயர் மட்ட விசாரணைகள் நடத்தப்படுகின்றன. இந்த விசாரணைகளில் அரசாங்க அதிகாரிகள் தவறிழைக்கின்றார்கள் என்பது நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிரான கடும் நடவடிக்கை எடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். இலங்கை சுதந்திரம் அடைந்த ஆரம்பத்தில் சிவில் சேவை அதிகாரிகள் அரசாங்க நிர்வாகத்திற்கு பொறுப்பாக இருந்தார்கள். அவர்கள் தன்னிச்சையாக முடிவெடுத்து நாட்டின் நலனுக்கு முக்கியத்துவமளித்து தங்கள் பணிகளை சிறப்பான முறையில் நிறைவேற்றினார்கள்.

அமைச்சர்கள் வெறும் அரசியல்வாதிகள் என்பதனால் ஒவ்வொரு துறைக்கும் இந்த அரசியல்வாதிகள் அமைச்சர்களாக நியமிக்கப்படும் போது, அவர்களுக்கு அமைச்சின் கொள்கை, அமைச்சின் செயற்பாடுகள் குறித்து கற்றுக் கொடுக்கும் நல்லாசான்களாக இந்த சிவில் சேவை உயர் அதிகாரிகள் அமைச்சுகளின் செயலாளர்களாக பணி புரிந்தார்கள். அமைச்சர்கள் தெரியாத்தனமாக பிழையான முடிவை எடுத்தாலும் அது தவறு என்பதை அமைச்சருக்கு சுட்டிக்காட்டி அந்த முடிவை மாற்றியமைக்கக் கூடிய திறமைமிக்க, நேர்மையான அதிகாரிகளாக இருந்தார்கள்.

இனிமேலாவது அரசாங்க உயர் அதிகாரிகள் பொறுப்புணர்வுடன் கடமைகளை நிறைவேற்றி அரசாங்கத்திற்கு நற்பெயரை ஏற்படுத்திக் கொடுப்பது அவசி யம். இந்த கழுகு கண்கள் இது விடயத்தில் தொடர்ந்தும் தனது கவனத்தை செலுத்தும்.

# இலங்கை விவகாரங்களில் இந்தியா தலையிடக்கூடாது

குணதாச அமரசேகரா

" இலங்கை விவகாரங்களில் இந்தியா அநாகரிகமான முறையில் தலையிட்டு உள்நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்தி வருகிறது.

டெசோவை கருணாநிதி மீண்டும் கூட்டி இலங்கையில் தமிழீழத்தை அமைக்கப் போவதாகக் கூறுகின்றார். இது அவர் காணும் பகல் கனவு என்பதை தமிழகமும் மத்திய அரசும் புரிந்துகொள்ள வேண்டும்" என்று தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் குணதாஸ அமரசேகர தெரிவித்தார்.

டெசோ மாநாட்டை எதிர்த்து நேற்று முன்தினம் தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியம் கொழும்பு பல்கலைக்கழக வளாகத்துக்கு முன்பாக நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதிக்கும் தமிழீழம் வேண்டுமென்றால் அதனை இந்தியாவில் அமைத்துக் கொள்ளட்டும்.

இலங்கையில் அதற்கான அனுமதியை ஒருபோதும் வழங்க முடியாது. மத்திய அரசின் ஊக்குவிப்பிலேயே கருணாநிதி டெசோவை நடத்துகின்றார். பிரதமர் மன்மோகன்சிங் ஒன்றுமே தெரியாது போன்று நடிக்கின்றார்.

மீண்டும் இலங்கையில் இரத்த ஆறு ஓடுவதற்கு இந்தியா செயற்படக் கூடாது.

உள்நாட்டு விடயங்களை எமது அரசு பார்த்துக்கொள்ளும். இந்தியா அந் நடவடிக்கையில் தலையிட வேண்டிய அவசியம் கிடையாது. 13 ஆவது திருத் தச் சட்டத்தை அரசியலமைப்பிலி ருந்து நீக்குவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எமது அரசியலமைப்புக்குள் பலவந்தமாக திணிக்கப்பட்ட இந்தியாவின் பிரிவினைவாத கொள்கைகளை முதலில் நீக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

# உயர்தர வினாத்தாள்களில் தொடர்ந்தும் சிக்கல்கள்

ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

இம்முறை உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியுள்ள மாணவர்கள் மேலும் மேலும் சிக்கல்களை எதிர்நோக்கி வருவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

நேற்று (13) இடம்பெற்ற பௌதீக விஞ்ஞானம் பகுதி 2 வினாப் பத்திரத்திலும் திருத்தங்கள் செய்யப்பட்டதாக சங்கத்தின் பிரதான செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

இம்முறை உயர்தரப் பரீட்சை ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் இதுவரை வினாத்தாள்களில் நான்கு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ள தென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான தி நத்தங்கள் மேற்கொள்ளப்படுவதால் மாணவர்களால் சிறந்த மனநிலையுடன் பரீட்சைக்குத் தோற்ற முடியாதுள்ளதென ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஏற்கனவே இணைந்த கணித வினாத்தாள்களிலும் விவசாய வினாத்தாளிலும் சிக்கல்களும் தவறுகளும் இடம்பெற்றுள்ளதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காரை மோதியது கடுகதி ரயில்: புத்தளம் - சிலாபம் பாதையில் பயங்கரம்



சிலாபம் - புத்தளம் ரயில் வீதியில் பாது காப்பற்ற ரயில் கடவையில் கார் ஒன்று ரயிலில் மோதுண்டு ஏற்பட்ட விபத் தில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

இவ்விபத்து நேற்று (13) காலை 08.30 அளவில் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த நால்வரும் சிலாபம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களின் நிலை கவலைக் கிடம் இல்லை என வைத்தியசாலை தகவல்கள் தொ-ிவிக்கின்றன.

கொழும்பில் இருந்து புத்தளம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த கடுகதி ரயிலிலேயே மேற்படி கார் மோதி விபத்துத்துக்குள்ளானது என பொலிஸார் கூறினர்.

## உன்னிச்சை பள்ளிவாசல் சம்பவம்:

# தமிழ்தேசியக் கூட்டமைப்பினர் கண்டனம்: குற்றவாளிகளை கைதுசெய்யும் கோரிக்கை

முஸ்லிம்களின் புனித நோன்பு காலத்தில் உன்னிச்சை இருநூறுவில் கிராமத்திலுள்ள முஸ்லிம்களின் பள்ளிவாயல் தீ வைத்து எரிக்கப்பட்ட சம்பவத்தையும் முஸ்லிம் பெண்ணொருவர் தாக்கப்பட்ட சம்பவத்தையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிப்பதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான பொன் செல்வராசா, பி.அரியநேத் திரன் மற்றும் சி.யோகேஸ்வரன் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் பாவற்கொடிச்சேனை எனும் கிரமத்தில் மீள் குடியேறிய முஸ்லிம் மக்களின் வழிபாட்டுத் தலமான பள்ளிவாயல் தீ வைக்கப்பட்டு எரிக்கப்பட்ட சம்பவத்தையும் ஒரு குடும்பப்பெண் தாக்கப்பட்ட சம்பவத்தையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் இடம் பெற்றுவரும் இந்த வேளையிலும் முஸ்லிம் மக்கள் புனித நோன்பு அனு'டிக்கும் இக்கால கட்டத்திலும் இவ்வாறான ஒரு வழிபாட்டுத்தலத்தையும் முஸ்லிம் பெண்ணொருவரையும் தாக்கிய சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஆயுதப்போர் இடம்பெற்று முடிவுக்கு வந்து அமைதி நிலவும் தமிழ், முஸ்லிம் மக்களின் இயல்பு வாழ்வையும் தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமையையும் சீர்குலைப்பதற்காக திட்டமிட்டு இந்தச் செயலை யார் செய்திருந்தாலும் அவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தி இவர்களுக்கான தண்டனை வழங்கப்பட வேண்டுமென கேட்கின்றோம் என அவர்களின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யன்னல் ஓரத்தில வைத்த நகைகள் மாயம்

வலிகாமம்

வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள் வீட்டு யன்னல் கரையில் தங்க ஆபரணங்களை கழற்றி வைத்து விட்டு படுத்துறங்கிய வேளையில் சுமார் மூன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் திருடப்பட்டுள்ளதாக இளவாலைப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள் தாம் தங்கியிருந்த வீட்டில் நகைகளை கழற்றி வைத்து விட்டு இரவு உங்கியுள்ளாகள்.

காலையில் எழுந்து பார்த்போது குறிப்பிட்ட நகைகள் காணமல் போயுள்ளமை கண்டு அதிர்சியடைந்துள்ளார்கள். திருட்டு சம்பவம் சம்பநதமாக இளவாலை பொலிஸில் முறையிடப்பட்டுள்னர்.

# யாழ்ப்பாணத்தில் புதிய மதுபான நிலையங்களுக்கு அனுமதி கிடையாது

யாழ்ப்பாணத்தில் புதிய மதுபான விற்பனை நிலையங்களை அமைக்க அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களத்தின் யாழ். அலுவலக உதவி அத்தியட்சகர் என்.சோதிநாதன் தெரிவித்துள்ளார்.

"போதை ஒழிப்போம்" என்னும் தொனிப் பொருளின் கீழ், 2011 ஆம் ஆண் டிற்கு பின்னர் மதுபான விற்பனை நிலையங்களுக்கு புதிய அனுமதி கள் வழங்குவதற்கு மறுக்கப்பட் டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அத்துடன் அனுமதிப்பத்திரம் இன்றி இயங்கும் மதுபான விற்பனை நிலையங்களை மூடுவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பல வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் மதுபான விற்பனை நிலையங்கள் தவிர்ந்த ஏனைய மதுபான விற்பனை நிலையங்களை மூடுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இருப்பினும் புதிய மதுபான விற்பனை நிலையங்களுக்கு அனு மதிப்பத்திரங்கள் வழங்கப் படமாட்டாது எனவும் மதுவரி திணைக்களத்தின் யாழ். அலுவலக உதவி அத்தியட்சகர் தெரிவித்தார்.

# சிறுவர் பெண்கள் விவகாரம்: குறைபாடுகளை களைய நடவடிக்கை

வலிகாமம்

யாழ். மாவட்ட பொலிஸ் நிலையங்கள் சிலவற்றில் பெண்கள் சிறுவர்கள் பிரிவு முழுமையாக செயல்படாத நிலமை காணப்படுகின்றது,அதனை சீர் செய்து நல்ல முறையில் இயங்க வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என யாழ் மாவட்ட பிர-திப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடகவியலாளாகளுடனான சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக்பெரேரா, யாழ். மாவட்ட பொலிஸ் நிலையங்களில் தமிழ் தெரிந்த பெண் பொலிஸார் போதியளவில் நியமனம் செய்யப்படவில்லை.

இதனால் பெண்கள் சிறுவாகளின் முறைப்பாடுகளை ஆண்களே பதிவு செய்யும் நிலமை காணப்படுகின்றது. அனாலும் கூடியளவுக்க பெண்பொலிசாரின்சேவை இவர்கள் விடயத்தில் பெறப்படுகின்றது.

எதிர் காலத்தில் இந்நிலையில் மாற்றம் கொண்டுவரப்பட்டு பெண்கள் சிறுவர் விடயங்களை சீரான முறையில் பெண் பொலிஸார் கையாள்வதற்கான நடவடிக்கைகள் மேற்க் கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.



மக்களின் சுகவாழ்விற்காக அளவெட்டி கிழக்கு முற்போக்கு இளைஞர் சனசமூகநிலையத்தினால் அண்மையில் மருத்துவ முகாம் ஒன்று நடாத்தப்பட்டது. இம்மருத்துவமுகாமிற்கு தெல்லிப்பளை சுகாதார வைத்தியசாலை வைத்தியர் நந்தகுமார். வைத்தியர் சாளினி, தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை வைத்தியர் செந்தூரன், துர்க்காபுர ஆயுர்வேத சித்தமருத்துவர் துசியந்தி ஆகியோர் கலந்து வைத்திய ஆலோசனைகளை வழங்கினர். இம்மருத்துவ முகாமில் பெருமளவான தாய்மார்கள், குழந்தைகள் கலந்துகொண்டு பயன்களைப்பெற்றனர்.

# திருட்டுக்குச் சென்றவர் குறட்டை

இரத்தினபுரியில் உள்ள மதுபான நிலையம் ஒன்றில் பணம் திருடும் நோக்கத்துடன் அந்த நிலையத்தினுள் பூட்டை உடைத்து புகுந்த நபர் ஒருவர் உறக்கமடைந்த நிலையில் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் கடையில் மதுபானத்தை அருந்திவிட்டு போதையேறி உறங்கிக்கொண்டிருந்த நிலையிலே கைதுசெய்யப்பட்டார்.

சந்தேக நபரிடம் இருந்து ரூட்ரைவர், கத்தி உள்ளிட்டவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழ்நாதம்
Thamil Naatham
ஆகஸ்ட் மாதம் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை

# இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த பாடங்களை கற்றுக் கொள்ளுங்கள்

தமிழ்க் கைதிகள் கணேசன் நிமலரூபன், மரியதாஸ் டெல்றொக்ஷன் ஆகியோர் மரணமான சம்பவங்கள் தமிழ் மக்கள் மத்தியில் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது. இருவருமே ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வந்தபோதே மரணமாகியிருக்கிறார்கள். கணேசன் நிமலரூபன் ஜூலை மாதம் 3ஆம் திகதி காலமானார். மரியதாஸ் டெல்றொக்ஷன் ஆகஸ்ட் மாதம் 7ஆம் திகதி காலமானார். இருவருமே வவுனியா சிறைச்சாலையில் ஜூன் மாதம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்தவர்கள். டெல்றொக்ஷன் நினைவு திரும்பாத நிலையிலேயே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, அதே நிலையிலேயே மரணமானார்.

கொல்லப்பட்டவர்கள் தமிழ்க் கைதிகள், தாக்குதல் நடத்தியவர்கள் சிங்களச் சிறை அதிகாரிகளும் படையினருமென்றுதான் கூறப்படுகிறது. எனவேதான் இனம் என்ற மெலிதான உணர்வு இங்கே ஊடுபாவாக ஓடிக்கொண்டிருக்கிறது. டெல்றொக்ஷனின் மரணம் சம்பந்தமாகவும், மகர சிறைச்சாலை தமிழ்க் கைதிகள் தொடர்பாகவும் ஆணைக்குழுவொன்றினை நியமித்து விசாரணையை நடத்துமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் வீ.ஆனந்தசங்கரி ஜனாதிபதியைக் கடித மூலம் கேட்டுள்ளார்.

முன்னர் புலி இயக்கத் தலைவர் பிரபாகரனுக்கு தொடர்ச்சியாகவே கடிதங்கள் எழுதிவந்தவர் ஆனந்தசங்கரி. அதாவது வன்செயல் நடவடிக்கைகளைக் கைவிடுமாறு அந்தக் கடிதங்களிலெல்லாம் ஆனந்தசங்கரி வேண்டுகோள்விடுத்துவந்தார். ஆனால் இதற்கு முன்னைய காலத்தில் தமிழ் இளைஞர்களை உசுப்பிவிடும் பாணியில் ஆனந்தசங்கரி அவர்கள் கருத்துக்களை கூறி வந்தாரென்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதற்காக இந்த இரு இளைஞர்களின் மரணங்கள் தொடர்பாக விசாரணை தேவையில்லையென்று கூற முன்வரவில்லை.

தமிழ்க் கைதிகள் மிருகத்தனமாக தாக்கப்பட்டார்களா? இல்லையா? என்பது கண்டறியப்பட வேண்டுமென்ற கோரிக்கை நியாயமானது. இந்தத் தமிழ்க் கைதிகளை அரசியல் கைதிகளென்று தமிழர் தரப்பைச் சேர்ந்த சிலர் கூறுகிறார்கள். இல்லை, இவர்கள் பயங்கரவாதச் சந்தேக நபர்களென்று சிங்களத் தரப்பைச் சேர்ந்த சிலர் கூறுகிறார்கள். இவர்கள் அரசியல் கைதிகளா? இல்லை, பயங்கரவாதச் சந்தேக நபர்களா? என்பதல்ல இங்குள்ள பிரச்சினை. இவர்களும் மனிதர்கள் என்ற கோதாவில் தான் பிரச்சினைகள் அணுகப்பட வேண்டும்.

அநுராதபுர சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட தமிழ்க் கைதியொருவரை மீண்டும் வவுனியா சிறைச்சாலைக்கு மாற்றப்பட வேண்டுமென்று கோரியே தமிழ்க் கைதிகள் வவுனியா சிறைச்சாயில் உண்ணாவிரதமிருந்தனர். உண்ணாவிரதமென்பது அஹிம்சைப் போராட்டம். சிறைக்காவலர்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்தமை அடாவடித்தனம். மூன்று சிங்கள சிறைக் காவலர்களைப் பிடித்து பணயக் கைதிகளாக வைத்திருந்தமையே பிரச்சினையின் ஆரம்பம் என்று கூறப்படுகிறது. இந்தப் பணயக் கைதிகளை விடுவிப்பதற்குப் பல தடவைகள் உண்ணாவிரதிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டதாக சிறைச்சாலை நிர்வாகமும், பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளும் கூறியிருக்கிறார்கள். சிறைக்காவலர்களை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்தமை அடாவடித்தனமான செயல் மட்டுமல்ல, அஹிம்சைவழி உண்ணாவிரதிகள் என்று கூறுவோர் செய்யவே கூடாத செயலுமாகும்.

இந்த மூன்ற சிறைக் காவலர்களையும் விடுவிப்பதற்காகத்தான் வவுனியா சிறைச்சாலைக்குள்ளே அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. சிறைக் காவலர்களும் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். மூன்று சிங்கள சிறைக்காவலர்களையும் 24 மணித்தியாலங்களுக்கு மேலாக பணயக் கைதிகளாக பிடித்து வைத்திருந்த தமிழ்க் கைதிகள், அவர்களை பண்பாக நடத்தினார்களா? என்றொரு கேள்வி இங்கே எழத்தான் செய்கிறது. இந்த மூன்று சிங்கள சிறைக் காவலர்களும் தமிழ்க் கைதிகளால் கொல்லப்பட்டிருந்தால் நாடு பூராகவும் சிறைகளில் இருக்கும் தமிழ்க் கைதிகள் மீது பழிவாங்கும் படலம் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கக்கூடிய சாத்தியங்களே உள்ளன. இங்கு தமிழ்-சிங்கள இனரீதியான முரண்பாடுகள் இன்னும் தீர்க்கப்படவில்லை என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதே. சிறைச்சாலைக்குள்ளேயே இரத்த ஆறு ஓடியிருக்கும்.

சந்தேக நபர்களையோ, குற்றவாளிகளையோ பிடிப்பதற்கு பலாத்காரம் பாவிக்கப்படலாமென்றுதான் சட்ட விதி கூறுகிறது. ஆனால் குறைந்த பட்ச பலாத்காரம்தான் பாவிக்கப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. பாவிக்கப்பட்டது நிச்சயமாகக் குறைந்தபட்ச பலாத்காரமாக இருக்க முடியாது. நிலைமை இப்படியிருக்க, மாரடைப்பால்தான் கைதி மரணமானாரென்று அரசியல்வாதிகள் எழுந்தமானமாகக் கதையளப்பது மேலும் குரோத உணர்வுகளைத் தூண்டிவிடவே செய்யும்.

கற்றுக் கொண்ட பாடங்களிலிருந்து நேரடியாகவும் எதிர்மறையாகவும் அனுபவங்களை அரசியல்வாதிகள் பெற்றுக் கொள்ள வேண்டும். அதிலிருந்து இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். விழுந்தபாட்டில் மாடுகளுக்குக் குறிசுடுவது போல எவருமே நடந்துகொள்ளக் கூடாது.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி/பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# எண்ணெய் வள அரசியல்
# கனியவள அரசியல்
# பயங்கரவாதத்துக்கெதிரான போர்!

செப்டம்பர் 11 தாக்குதலுக்குப் பின்னர் அமெரிக்கா பயங்கரவாதத்துக்கெதிரான யுத்தத்தை உலகளவில் தொடக்கி இருந்தது. பயங்கரவாதத்துக்கெதிரான யுத்தம் என்பது பல்வேறு வாதப்பிரதிவாதங்களை உலகளவில் ஏற்படுத்தி இருந்தபோதும் அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள் ஒருதலைப்பட்சமாகவே அந்த நிலைப்பாட்டில் உறுதியாக இருந்து வருகின்றன. பயங்கரவாதத்துக்கெதிரான போர் என்பது மேற்கின் நவகாலனித்துவ வடிவமோ என சந்தேகிக்கும் அளவுக்கு இன்று அது எங்களைக் கொண்டு வந்து நிறுத்தியுள்ளது.

செப்டம்பர் 11, தாக்குதலின் சூத்திரதாரி என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டும் அல்-கைதா இயக்கத்தின் தலைவர் ஒஸாமா பின்லேடனை பிடிப்பதை காரணமாக கூறியே அமெரிக்கா 2001 ல் ஆப்கானை ஆக்கிரமித்ததை நாம் அறிவோம். (இதுவே அமெரிக்காவின் பயங்கர வாத்துக்கெதிரான? முதலாவது யுத்தம்) ஆனால் ஒரு நாட்டை ஆக்கிரமிக்கும் அமெரிக்காவின் வெளிப்படையான காரணங்களுக்குப் பின்னால் எப்போதும் மறைமுக அமெரிக்க நலன்சார் அரசியல் அதன் ஒவ்வொரு ஆக்கிரமிப்புக்குப் பின்னாலும் இருந்தே வந்துள்ளது. கடந்த கால அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு வரலாறுகள் நமக்கு இந்த உண்மையைத்தான் சொல்லிக் கொண்டிருக்கின்றன.

ஈராக் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எண்ணெய் வள அரசியலே காரணம் என்பது ஏறத்தாழ நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். எனினும் உலகின் மிக வறிய நாடுகளுள் ஒன்றான ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக்குப் பின்னால் உள்ள அரசியல் இப்போது தெளிவாகி வருவது போல் உள்ளது. ஓஸாமா பின்லேடனைப் பிடிப்பது, தலிபான்களை ஆட்சியிலிருந்து அகற்றுவது, ஆப்கோனிஸ்தானில் ஜனநாயகத்தைக் கொண்டு வருவது போன்ற காரணங்களே ஆப்கானிஸ்தான் மீதான ஆக்கிரமிப்பின் போது அமெரிக்காவால் கூறப்பட்டவை.

அமெரிக்க ஆக்கிரமிப்புக்குப் பின்னால் ஆப்கானிஸ்தான் இன்று அமெரிக்காவுக்கும்,உலகுக்கும் வேறு வழிகளிலும் முக்கியம் பெறும் ஒரு நாடாக மாறியுள்ளது. அங்கு அமெரிக்காவால் மேற்கொள்ளப்பட்டு வரும் கனியவள ஆய்வுகள் மற்றும் அதன் பெறுபேறுகளால் ஆப்கானிஸ்தான் உலகின் முக்கிய கனிமப் பொருள் நிறைந்த கேந்திர நிலையமாக ஆகுவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன.

ஆப்கானிஸ்தானில் கனியவளம் மத்தியாசிய நாடென்றும், தென்னாசிய நாடென்றும் மாறிமாறி குறிப்பிடப்படும் ஆப்கானிஸ்தான் இன்று தென்னாசிய நாடுகளின் கூட்டுச் சங்கமான "சார்க்" அமைப்பிலும் அங்கம் வகிக்கிறது. உலகில் மிகவும் வறுமையான நாடுகளுள் ஒன்றாக கொள்ளப்படும் ஆப்கானிஸ்தான் அதன் வரலாற்றில் தொடரும் பல்வேறு போர் நடவடிக்கைகளால் மேலும் பாதிப்புக்குள்ளாகி வருகிறது. போர், வறுமை, ஊழல், அடிப்படைவாதம் என்பனவே இன்றைய ஆப்கானிஸ்தானின் பொது அடையாளமாக உள்ள நிலையில் ஆச்சரியமளிக்கும் வகையில் ஆப்கானிஸ்தானில் கனியவளம் குறித்த ஆய்வு முடிவுகள் வெளிவந்துள்ளன.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா மேற்கொண்டுவரும் ஆய்வுகளிலிருந்து ஆப்கானிஸ்தான் ஒரு கனிய வளங்கொழிக்கும் நாடு என்ற உண்மை கண்டறியப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் கனியவளம் குறித்த கண்டுபிடிப்பு அண்மையில் கண்டறியப்பட்ட ஒரு விடயமல்ல, ஆப்கானிஸ்தான் உலகுக்குத் தேவையான முக்கியமான கனியவளங்களைக் கொண்ட நாடு என்ற உண்மையை 1980 களிலேயே அறிய முடியுமாக இருந்தது. 1980 களில் சோவியத் யூனியன் ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்தபோது சோவியத் புவியியல் ஆராய்ச்சி நிபுணர்கள் ஆப்கானிஸ்தானில் கனியவள ஆய்வொன்றினை மேற்கொண்டிருந்தனர். ஆப்கானிஸ்தானின் சில பாகங்களில் அவர்கள் மேற்கொண்ட கனிப்பொருள் வள ஆய்வுகளின்போது அவர்களால் அது குறித்து பல்வேறு தகவல்களை சேகரிக்க முடிந்தது. 1989ல் சோவியத் துருப்புக்கள் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேற்றப்பட்டபோது ஆப்கானிஸ்தானின் புவியியல் ஆய்வாளர்கள் சிலர் அந்த தகவல்களை பாதுகாப்பாக வைத்திருந்தனர். ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தாலிபான்களின் ஆட்சியை கவிழ்த்த பிறகு அவர்கள் அந்த தகவல்களை மீண்டும் காபூலிலுள்ள புவியியல் ஆராய்ச்சி நூலகத்திற்கே கையளித்ததாக கூறப்படுகிறது.

இதையடுத்து 2006 ல் ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவினால் கனியவள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. சோவியத் யூனியனின் புவியியல் ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்டிருந்த அந்த கனியவள ஆய்வுகளின்போது சேகரிக்கப்பட்ட தகவல்களை முக்கிய உசாத்துணையாகக் கொண்டே அமெரிக்க புவியியல் ஆராய்ச்சியாளர்கள் ஆய்வினைத் தொடங்கினர். இக்கனியவள ஆய்வுகளின் விளைவாக ஏறத்தாழ 1 ட்ரில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள கனிமப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதுவரை ஆப்கானிஸ்தானில் அறியப்படாமலிருந்த பாரிய கனிய வளங்கள் இந்த ஆய்வுகளின்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வடக்கு ஆப்கானிஸ்தான் மேலும் கைத்தொழில்துறையை விருத்தி செய்வதற்குத் தேவையான லித்தியம் போன்ற மிகவும் மதிப்ப வாய்ந்த உலோகப் பொருட்களும் இக் கண்டுபிடிக்கப்பட்ட கனிப்பொருட்களில் அடங்குகின்றன.

ஆப்கானைப் பொறுத்தவரை இக்கனியவள கண்டுபிடிப்புக்கள் ஆப்கானின் சமூக-அரசியல்-பொருளாதாரத் துறைகளில் நேர்மறையானதும் எதிர்மறையானதுமான தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியவை..உலகின் மிக வறுமையான நாடுகளுள் ஒன்றாக ஆப்கான் விளங்குகிறது. ஆப்கானின் பொருளாதாரரீதியான புள்ளிவிபரங்களின்படி அங்கு 2/3 வீதமான மக்கள் நாளொன்றுக்கு 2 அமெரிக்க டொலருக்கும் குறைவான வருமானத்தையே பெறுகின்றனர். அதேநேரம் வேலையில்லா வீதம் மிக அதிகரித்த அளவில் காணப்படுகிறது. போதாக்குறைக்கு அது தொடராக சந்தித்து வந்த போர் நடவடிக்கைகள் காரணமாகவும் அதன் பொருளாதாரம் மேலும் நலிவடைந்துள்ளது. இந்நிலையில் இக்கனிய வளக் கண்டுபிடிப்பானது ஆப்கானின் பொருளாதாரத்தை மேம்படுத்த நிச்சயம் உதவும்.

உண்மையில் ஆப்கானில் வெற்றியளித்துள்ள கனிய வள ஆய்வுகள் அமெரிக்காவை மிகவும் புளகாங்கிதத்தில் ஆழ்த்தியுள்ளது. ஆப்கானைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்து அதன் கனிய வளங்களை சூறையாடும் ஒரு ஏகாதிபத்திய சுரண்டலையே ஆப்கான் மீது அமெரிக்கா பிரயோகிக்கப்போகிறது.

அதேநேரம் அமெரிக்கா, ஆப்கான் இன்னும் கனிய வளங்களை தனியாக கையாளும் நிலைக்கு தன்னை வளர்த்துக் கொள்ளவில்லை என்றும் ஆப்கான் அதனை தனது சொந்த வருமானத்துக்குரிய துறையாக மாற்றிக் கொள்வதற்கு பல தசாப்தங்கள் தேவைப்படலாம் என்றும் ஆலோசனை கூறியதோடு மட்டுமல்லாது மேலும் ஒரு படி சென்று அந்த ஆலோசனை கூறும் பணியையும் தானே பொறுப்பேற்றதுடன் ஆப்கானில் கனிப்பொருள் அபிவிருத்தியைக் கையாள்வதற்கான ஒரு சிறப்புக் குழுவொன்றையும் பென்டகன் நியமித்துள்ளது.

பென்டகன் கனிப்பொருள் ஆராய்ச்சித் தலைவரும், அமெரிக்க வர்த்தகப் பாதுகாப்புத் துறையின் துணைச் செயலாளரும "இதனைக் கையாள்வதற்கு ஆப்கானின் கனிய வள அமைச்சு தயாரில்லை. நாங்கள் அவர்களைத் தயார்படுத்த முயற்சித்துக் கொண்டிருக்கிறோம்" என்று கூறுவதிலிருந்தே அமெரிக்க நலன் வெளிப்படுகிறது.

இக்கனியவளப் பொருளாதாரத்தை விருத்தி செய்து ஏற்கனவே வறுமையினாலும் போரினாலும் சீரழிந்துள்ள ஆப்கானின் பொருளாதாரத்தை சீர்படுத்தி ஆப்கானை சமூகப் பொருளாதார அரசியல் அபிவிருத்திக்கு இட்டுச் செல்லும் நோக்கத்தை அமெரிக்கா கொண்டிருக்கவில்லை என்பதைத்ததான் அமெரிக்க அதிகாரிகளின் கூற்றுக்களும் நடவடிக்கைகளும் எடுத்துக் காட்டுகின்றன. உண்மையில் அமெரிக்காவிடம் ஆப்கானோ உலகமோ இதனை எதிர்பார்க்கவும் முடியாது.

- ***NEWYORK TIMES***

***தமிழில்-ஜே-எச்***

## சகோதரனும் சகோதரியும் காதல் முடிவு தற்கொலை

காலியில் ஓடிக்கொண்டிருந்த ரயிலுக்கு முன்னாள் பாய்ந்து தற்கொலை செய்து கொண்ட ஜோடி சகோதரனும் சொந்தச் சகோதரியுமென்று பொலிசார் கூறினர். இவர்கள் இருவருக்கும் தாய் ஒருவர் தான். ஆனால் தந்தையார் இருவராவர். பெற்றோர் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்த பின்னர் இளைஞன் கண்டியில் அவரது மாமியாரால் வளர்க்கப்பட்டு வந்தாள். அவனது தாய் மீண்டும் திருமணமாகி இரு பெண்பிள்ளைகளுக்குத் தாயானாள். அந்த இளைஞர் மூத்த சகோதரியை வைபவமொன்றில் கண்டு காதல் கொண்டான். தாம் சகோதர, சகோதரிகளெனப் பின்னர் இவர்களுக்குத் தெரிய வந்தபோது சமூகத்துக்கு முகம் கொடுக்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டனரென விசாரணைகள் மூலம் தெரியவந்தது.

## கால்நடைகள் பதிவு

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் கால்நடை வளர்ப்போர்கள் அனைவரினது கவனத்திற்கு வேலணைப் பிரதேச செயலரினால் விடுக்கப்பட்டுள்ள முக்கிய அறிவித்தல் சம்பந்தமாக இப் பிரதேசத்தில் கால்நடை வளர்ப் போர்கள் அனைவரும் தங்களிடம் உள்ள கால்நடைகள் உள்ள கால்நடைகள் அனைத்தையும் கால்நடை அபிவிருத்தினைக் களத்தில் பதிவு செய்து மாடுகளுக்கான காதுப்பட்டிகளை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளன.

அவ்வாறு காதுபட்டிகளை அணிந்து கொள்ளாத மாடுகள் அனைத்தும் கட்டாக்காலி மாடுகள் என கருதப்பட்டு அவைகள் யாவும் பிரதேச சபையினரால் பிடிக்கப்பட்டு பிரதேச சபையினரால் பொது ஏலத்தில் விடப்பட்டு விடப்பட்டு விற்பனை செய்யப்படும் எனவும் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன் இந்த கால்நடைகளுக்கான காதுப்பட்டிகளை பெற்றுக்கொள்வதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டிருப்பதாக பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

# முறிகண்டிப் பிள்ளையார் கோயில் கைப்பற்றப்பட்டதால் நானும் என் குடும்பத்தினரும் இந்தியாவுக்கு தப்பியோடினோம்

### -பரம்பரைத் தர்மகர்த்தா உச்ச நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனு



1990ஆம் ஆண்டு முறிகண்டிப் பிள்ளையார் கோயிலையும் அதனோடு சேர்ந்த கோயிலுக்குச் சம்பந்தமில்லாத சொத்துக்களையும் புலிகள் பலாத்காரமாக கைப்பற்றிக் கொண்டதால், நானும் எனது குடும்பத்தினரும் இந்தியாவுக்குத் தப்பியோடினோம். அதன் பின்னர் கோயிலை நிர்வகிப்பதற்கு புலிகள் தமது ஆட்களை நியமித்தனர். புலிகளின் நிர்வாக காலப் பகுதியில் கோயிலுக்கெனச் சேர்ந்த பணத்தை புலிகளே எடுத்துக் கொண்டனர்" என்று மேற்படி கோயிலின் பரம்பரைத் தர்மகர்த்தா ஜி. மணிவண்ணன் உச்சநீதிமன்றில் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவில் குறிப்பிட்டுள்ளார். இக்காலப் பகுதியில் கோயிலின் புனிதத்தை கருத்தில் கொள்ளாது வெறுமனே பணம் சம்பாதிக்கும் நோக்குடன் அங்கு பல கடைகள் உருவானதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

இப்போது இந்தக் கோயில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படுவதாகவும் கோவிலுக்கெனச் சேரும் பணம் கொழும்புக்கு கொண்டு செல்லப்படுவதாகவும் மனுதாரர் குற்றம் சாட்டியுள்ளார்.

முறிகண்டிப் பிள்ளையார் கோயில் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட உரிமை மனு தொடர்பான விசாரணை அடுத்த வருடம் ஜனவரி மாதம் 23ஆம் திகதி விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்படுமென்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தமிழ் பேசும் உச்ச நீதிமன்ற நீதியரசர்களின் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படமென்றும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முறிகண்டிப் பிள்ளையார் கோயிலின் பரம்பரை தர்மகர்த்தா ஜி.மணிவண்ணன் இந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு விசாரணை உச்ச நீதிமன்ற நீதியரசர்களான ஷிராணி திலகவர்த்தன, எஸ்.ஐ.இமாம், பிரியஸர்த் டெப் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே மேற படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

தன்து அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதாக குறிப்பிட்டு ஜி.மணிவண்ணன் இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு விசாரணையை தொடர்வதற்கு உச்ச நீதிமன்றம் கடந்த வருடம் ஜனவரி மாதம் 15ஆம் திகதி அனுமதி அளித்தது. இதற்கிடையில் கோயில் வழிபடுவோர் சபை சார்பில் அதன் தலைவர் திருநாவுக்கரசும் செயலாளர் வி.நாகராசாவும் மற்றொரு மனுவொன்றினைத் தாக்கல் செய்தனர்.

இந்தக் கோயிலை நிர்வகிப்பதற்கு வழிபடுவோரின் பிரதிநிதிகள் அடங்கிய சுயாதீனமான நிர்வாக சபையொன்று அமைக்கப்படவேண்டுமென்று இவர்கள் தமது மனுவில் கோரிக்கை விடுத்திருந்தனர்.

முறிகண்டி பிள்ளையார் கோயில் ஏ-9 பாதையில் அமைந்துள்ளது. இந்தக் கோயிலையும் அதன் சுற்றாடல் பகுதியையும் வர்த்தக ரீதியான சுரண்டல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த முயற்சிகள் எடுக்கப்படுவ்தாகவும், இதன்மூலம் கோயிலின் புனிதத் தன்மையை மாசுபடுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும், பரம்பரை தர்மகர்த்தாவான மணிவண்ணன் தனது மனுவில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் இந்தக் கோயில் சொத்துக்கள் யாவும் தன்னிடம் மீளக் கையளிக்கப்பட வேண்டுமென்று பரம்பரை தர்மகர்த்தா மணிவண்ணன் தனது மனுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

## காவத்தை இரட்டைக் கொலைகள் தகவல் வழங்கினால் சன்மானம்

காவத்தை கொட்டகதென என்ற இடத்தில் அண்மையில் தாயையும், மகளையும் கொலை செய்தவர்கள் தொடர்பாக சரியான தகவல்களை வழங்குபவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபா சன்மானம் வழங்க பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் முன்வந்துள்ளார். 63 வயதான பிரேமாவதியென்ற தாயும் புஸ்பகுமாரி என்ற 32 வயது மகளுமே கொல்லப்பட்டவர்களாவர். இருவரது முகங்களிலும் கத்திக்குத்துக் காயங்கள் காணப்பட்டன. அறை ஒன்றிற்குள் வைத்து

# இலங்கை அரசின் வாக்குரிமையை நம்பியே காலவரையற்ற உண்ணாவிரதத்தைக் கைவிட்டேன்




இலங்கையில் மோதல்கள் உச்சகட்டத்தை எட்டியபோது, இலங்கை அரசின் தவறான வாக்குறுதிகளை நம்பியே, உடனடிப் போர் நிறுத்தம் கோரி தாம் மேற்கொண்ட காலவரையற்ற உண்ணாவிரதத்தினை சிலமணி நேரங்களிலேயே கைவிட்டதாகக் கருணாநிதி தெரிவித்தார். சென்னை அக்கார்ட் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்ற டெசோ ஆய்வரங்கின்போது இவ்வாறு கருணாநிதி கூறினார்.

2009ஆம் ஆண்டு ஏப்ரல் 27ஆம் நாளன்று கருணாநிதி உண்ணாவிரதம் தொடங்கியவுடன், புதுடில்லிக்கும் கொழும்பிற்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று, கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தமாட்டோம் என இலங்கை அரசு அறிவிக்க, தி.மு.க. தலைவரும் தனது போராட்டத்தினை முடித்துக் கொண்டார்.

அது குறித்து இன்றளவும் பல்வேறு கடுமையான விமர்சனங்கள் எழுந்தவண்ணம் உள்ளன.

இப்பின்னணியிலேயே சென்னையில் நேற்று முன்தினம் தொடங்கிய தமிழ் ஈழ ஆதரவாளர் அமைப்பு டெசோவின் மாநாட்டின் ஒரு பகுதியாக நடந்த ஆய்வரங்கத்தைத் தொடக்கி வைத்துப் பேசுகையில்தான் கருணாநிதி மேற்கண்டவாறு கூறினார். தான் உண்ணாவிரதத்திலிருந்தபோது, போர் முடிவிற்கு வந்துவிட்டதாக இலங்கை அரசு அறிக்கை ஒன்றினை வெளியிட்டது. அது தனக்கு மத்திய வெளியுறவு அமைச்சகத்தால் அனுப்பிவைக்கப்பட்டது. அவ்வறிக்கையை நம்பியே உண்ணாவிரதத்தைக் கைவிட நேர்ந்ததாகக் கூறினார்.

"ஈழத் தமிழர்களின் பிரச்சினையானது மனிதாபிமானம், மனித உரிமைகள், சுயமரியாதை ஆகியவற்றுடன் தொடர்புடையது. ஈழத் தமிழர்கள் பிரச்சினை கால் நூற்றாண்டாக எரிந்து கொண்டிருக்கிற ஒரு பிரச்சினை என்பதை மறக்க முடியாது. இலங்கை அரசு இந்தியாவை ஏமாற்றி விட்டது. இலங்கையில் போருக்கு முன்பும், போருக்கு பின்பும் தமிழர்கள் இரண்டாம்தர குடிமக்களாக நடத்தப்படுகிறார்கள். அவர்களுக்கு சட்ட உரிமைகள் மறுக்கப்படுகின்றன."

இந்நிலையில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு மீள் குடியமர்வு, நிவாரணம், புனர்வாழ்வு போன்ற விடயங்களில் அவசரத் தீர்வு காணப்பட வேண்டும். இடைக்காலத் தீர்வாக உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை தேவைகளை நிறைவேற்றி தமிழர்கள் நிம்மதியாக வாழ வழிவகை செய்ய வேண்டியுள்ளது.

சொத்துரிமை, கல்வி, வேலை வாய்ப்பு மற்றும் இதர ஜனநாயக உரிமைகள் நிலைநாட் டப்பட வேண்டும். அகதிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் இதில் அடங்கும். நிரந்தரத் தீர் வாக நீண்ட காலமாக விவாதிக்கப்பட்டு வரும் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

ஆய்வரங்கத்தில் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். ஈழத் தமிழர்களுக்காக இரண்டு முறை ஆட்சியை இழந்த தி.மு.க. எப்போதுமே அவர்களுக்கு ஆதரவாக இருக்கும் என்றும் கருணாநிதி கூறினர்.

## யாழ். போதனா வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலைக்கு அமைச்சர் விஜயம்



யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலையினது சுத்தம், சுகாதாரம் தொடர்பில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நேரில் சென்று ஆராய்ந்தறிந்தார்.

யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலைக்கு இன்றையதினம் மாலை விஜயம் மேற்கொண்ட அமைச்சர் அவர்கள் அங்குள்ள சிற்றுண்டிச்சாலையினது சுத்தம் சுகாதாரம் தொடர்பில் ஆராய்ந்தறிந்ததுடன் இதன்போது சிற்றுண்டிச்சாலையின் பல பகுதிகளையும் பார்வையிட்ட அமைச்சர் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருட்களையும் பார்வையிட்டார்.

அத்துடன் நோயாளர்களினதும், மக்களினதும் நலன்களைக் கருத்தில் கொண்டு சிற்றுண்டிச்சாலையினை நடாத்துவோர் செயற்படும் அதேவேளை உணவு மற்றும் உணவல்லாத பொருட்களினது சுகாதாரம் தொடர்பிலும் கவனம் செலுத்தவேண்டுமென துறைசார்ந்தவர்களிடமும் கேட்டுக்கொண்டார்.

இதனிடையே சிற்றுண்டிச்சாலையின் தேவைகள், குறைபாடுகள் தொடர்பிலும் கேட்டறிந்து அவற்றுக்கு தீர்வு காண்பது தொடர்பாக இதன்போது ஆலோசனைகளையும் உரிய பணிப்புரைகளையும் வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

# இனவாத கட்சிகளால் மக்களுக்கு விமோசனம் இல்லை

### - கிழக்கு முன்னாள் முதல்வர்

உரிமை, அபிலாஷை என கோஷமிடுபவர்களால் மக்களுக்கு எந்த வித விமோசனமும் இல்லை என கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் கூறுகிறார்.

நமது நாட்டிலே கிழக்கு மாகாண த்னித்துவச் சிறப்பு மிக்க மாகாணம் தமிழர்களும் முஸ்லிம்களும் ஏறத்தாழ சம தொகையிலே வாழ்கிறார்கள். மூவின மக்கள் வாழ்ந்த போதும் இனங்களுக்கிடையே வெறுப்புணர்வோ, கருத்து வேற்றுமையோ, முரண்பாடுகளோ கிடையாது. எந்த வித குரோதமும் இன்றி இணக்கப்பாட்டுடனும் இன நல்லிணக்கத்துடனும் வாழ்கிறார்கள். கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கும், முஸ்லிம்களுக்குமிடையிலான இன ஒற்றுமை வரலாற்று ரீதியானது. நீண்ட காலமாக இவ்விரு இன மக்களும் சகோதரர்கள் போல் வாழ்ந்து வருகிறார்கள்.

இரு இனங்களும் சமய வழிபாடுகள், சமய ஆசாரங்கள், கலாசாரம் போன்ற அம்சங்களில் வேறுபட்டாலும் இன ஒற்றுமைக்கு அத்தகைய அம்சங்களால் தடை




# தேசிய இன ஒன்றிப்புக்கு களமாக அமையும் மடுத் திருப்பதி!

**"கேட்ட வரம் அளிக்கும்**
**கீர்த்திபெற்ற சீமாட்டி**
**காட்டில் குடியிருக்கும்**
**கருணையுள்ள என் தாயே**
**பாட்டில் மலர் தொடுத்தேன் பாலோடு தேன் எடுத்தேன்**
**நாட்டில் அமைதி என்ற நதியைத் திருப்பவிடு"**

என்று மடு அன்னைக்கு பாமாலை சூட்டினார் சொல்லின் செல்வர் இளவாலை அமுது என்ற நம் ஈழத்துப் புலவன்.

மடுத்திருப்பதி! மக்களனைவரையும் கவர்ந்திழுக்கும் மந்திரச்சொல். வனவிலங்குகள் வாழும் அடர்ந்த காட்டின் மத்தியிலே, எழில்மிகு அன்னையாக, கானகச் செல்வியாக மடு அன்னை கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கின்றாள். அவளை அண்டிவரும் அனைவருக்கும் அவள் அடைக்கலம் கொடுக்கின்றாள் அருள்மழை பொழிகின்றாள்.

யுத்தம் முடிவடைந்த சூழ்நிலையில் இம்முறை ஆவணித்திருவிழாவுக்கு நாட்டின் பல பாகங்களிலும் இருந்து பல இலட்சம் மக்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மடுத்திருப்பதியின் சுருக்கமான வரலாற்றையும் இத்திருத்தலத்தின் அற்புத ஆற்றலையும், இத்திருத்தலம் வழங்கும் ஆன்மீகப் புதுப்பித்தல் அனுபவத்தையும், இத்திருத்தலம் இன்றைய இலங்கைச் சூழமைவில் எவ்வாறு தேசிய இன ஒற்றமைக்கு களமாக அமைகின்றது என்பதையும் இக்கட்டுரை சுருக்கமாக ஆராய முற்படுகின்றது.

**மடுத்திருப்பதியின் தொடக்க வரலாறு:**

ஒல்லாந்தர் இலங்கையை ஆண்ட காலப்பகுதியோடு தான் மடுத்திருப்பதியின் வரலாறும் ஆரம்பமாகின்றது. மன்னாரில் இருந்து 10 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் இருக்கும் மாந்தை என்ற கிராமத்தின் ஆலயம்தான் மடு மாதா திருச்சுருபத்தின் ஆதி இருப்பிடமாகும்."செபமாலை மாதா என்று அழைக்கப்பட்ட அந்தத் திருச்சுருபம்தான் இன்றைய மடுமாதா.

ஒல்லாந்தருடைய ஆட்சியில் கத்தோலிக்கருக்கு எதிராகக் கொடூரமான வேத கலாபனை ஆரம்பித்தது. இந்தக் கலாபனையில் இருந்து தங்களைக் காப்பாற்றும் பொருட்டும், செபமாலை மாதாவின் திருச்சுருபத்தைப் பாதுகாக்கும் பொருட்டும், மாந்தை மக்கள் அங்கிருந்து புறப்பட்டனர். குருக்களின் துணையில்லாத அந்த வேளை யிலும், மாந்தையில் இருந்த 20 பக்தியுள்ள குடும்பங்கள் செபமாலை மாதாவின் திருச்சுருபத்தைத் தூக்கிக்கொண்டு, அடர்ந்த வன்னிக் காட்டினுள் புகுந்தனர். திசை தெரியாது அங்கும் இங்கும் அலைந்தனர். இறுதியாக "மருதமடு என்ற இடத்திற்கு எவ்வித ஆபத்தும் இன்றி மாதாவின் வழிநடத் தலோடு வந்து சேர்ந்தார்கள்.

இவ்வேளையில் யாழ்ப்பாண நகரில் ஒல்லாந்தருடைய வேதகலாபனை தொடர்ந்துகொண்டிருந்தது. எழுநூறு கிறிஸ்தவர்கள் மட்டில் தங்களைக் காப்பாற்றிக் கொள்வ தற்காக யாழ்ப்பணத்திலிருந்து வன்னிக்காட்டிற்குள் புகுந்தனர். அவர்கள் பூநகரியைக் கடந்து, பயத்தோடும் பதட்டத்தோடும் அடர்ந்த காட்டினுள் அலைந்து கொண்டி ருந்தார்கள். ஏற்கனவே அங்கு வந்திருந்த மாந்தைக் கிறிஸ்தவர்களோடு இவர்களும் சேர்ந்து அன்னையின் அரவணைப்பில் வாழ்ந்து வந்தார்கள்.

யாழ்ப்பாணத்திலிந்து தப்பிவந்தவர்களில் போர்த்துக் கேய தளகர்த்தனின் மகளாகிய "எலேனா" என்பவளும் ஒருவர். இவள்தான் முதன் முதலில் மடு அன்னைக்கு சிறிய ஆலயம் அமைத்தாள். இவளுடைய இந்த நற்செயலுக்காக கிறிஸ்தவர்கள் இந்த இடத்தை சிலேனா மருதமடு என்று அழைத்தார்கள். இந்த இடம்தான் இன்றைய மடுத்திருப்பதி ஆகும்.

**அருளும் ஆற்றலும் நிறைந்த மடு மண்:**

மடுத்திருப்பதியின் அற்புத ஆற்றல் உலகறிந்த விடயமாகும். மடு அன்னையின் பரிந்துரையால் பல அற்புதங்கள் நடைபெறுகின்றன. அதனால்தான் இப்பதிநோக்கி மக்கள் இலட்சக்கணக்காகக் கூடுகின்றனர். பொன் விளையும் பூமி என்று சொல்வார்களே! அதுபோலதான் மடு அன்னையின் திருப்பதியில் உள்ள மண்கூட மருந்தாகத் திகழ்கின்றது. ஆம், இந்த மண் அருள்நிறைந்த மண்! ஆற்றல் நிறைந்த மண்! இத்திருத்தல மண்ணுக்கு சிறப்பான பெருமை உண்டு. உலகின் எங்குமே இல்லாத ஒரு நடைமுறை இங்கு உள்ளது. அதுதான் இத்திருத்தலத்திலிருந்து பெறப்படும் மண் நோய் தீர்க்கும் அருமருந்தாக விளங்குவது.

இத்திருப்பதியின் வளாகத்திலிருந்து பெறப்படும் மண் ஆசீர்வதிக்கப்பட்டு பிரதான ஆலயத்தின் ஒரு மூலையில் அதற்கென அமைக்கப்பட்ட ஒரு தொட்டியில் வைக்கப்படுகின்றது. இந்த மண்ணை மக்கள் தம் வீடுகளுக்கு எடுத்துச்செல்கின்றார்கள். குணமளிக்கும் மருந்தாக இந்த மண்ணைப் பயன்படுத்துகின்றார்கள். "கோயில் மருந்து" என்று இது அழைக்கப்படுகின்றது.

நோய்க்கு மருந்தாகவும், தீய சக்திகளில் இருந்து பாதுகாப்புப்பெறும் கவசமாகவும் மக்கள் இதைக் கருதிப் பயன்படுத்துகின்றார்கள். இந்த மண்ணை நீரில் கரைத்து நோயாளிகளுக்கு குடிக்கக் கொடுக்கின்றாகள். நெற்றி யில் நெஞ்சில் பூசுகின்றார்கள். தீமைகள் தம்மை அணுகாவண்ணம் தம் வீட்டு மூலைகளில் தெளிக் கின்றார்கள். மடுத்திருப்பதியின் புனிதத்திற்கும் அருள் வளத்திற்கும் சிறப்பான ஒரு எடுத்துக்காட்டாக "கோயில் மருந்து" என்று அழைக்கப்படும் இந்த மடு மண் அன்று தொடக்கம் இன்று வரை திகழ்கின்றது.

பாம்பு தீண்டிய நிலையில் இங்கு கொண்டுவரப்படும் மக்கள் இப்பதியை அடைந்ததும் குணம் பெறுகின்றார்கள் என்பதும் மக்களின் ஆழமான விசுவாசமாகும்.

**மடு அன்னை குறைவுபடாத தாயன்புக்கு இலக்கணம்**

"கருணை மழை பொழியும் கானகச் செல்வி என மடு அன்னை அழைக்கப்படுகின்றாள். குறைவுபடாத தாயன்புக்கு இலக்கணமாக இவள் விளங்குகின்றாள். "சொந்த சுமையைத் தூக்கி தூக்கி சோர்ந்து போனேன். ஏன்ற விரக்தியின் வார்த்தைகள்தான் இன்று எப்பக்கத்திலும் ஒலிக்கின்றது. துன்பங்கள், துயரங்கள், இழப்புக்கள் மத்தியில் மக்கள் ஆறுதல் தேடித் தஞ்சமடையும் தாயாக மடு அன்னை விளங்குகின்றாள். "தாயின் மடியில் தலை வைத்திருந்தால் துயரம் தெரி-வதில்லை" என்று சொல்வார்களே! அத்தகையதோர் உணர்வுடன்தான் மக்கள் இத்திருப்பதி நோக்கி ஓடோடி வருகின்றார்கள்.

தாயன்பு - அது தனி அன்பு! அது தனித்துவமான அன்பும்கூட! அம்மை அப்பனாக விளங்கும் இறைவனுடைய தாயன்பை, திருவிவிலியம் தெளிவாகச் சொல்கிறது. "நீங்கள் மார்பில் அணைக்கப்படுவீர்கள். மடியில் வைத்துச் சீராட்டப்படுவீர்கள். ஒரு தாய் தன் குழந்தையைத் தேற்றுவதுபோல நானும் உங்களைத் தேற்றுவேன்." இறைத் தந்தையின் இத்தகைய அன்பையே மடு அன்னையும் பிரதிபலிக்கின்றாள்.

பெரும் சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடம் வாருங்கள். உங்களை நான் இளைப்பாற்றுவேன்" என்று நம் ஆண்டவர் இயேசு கூறினாரே! அந்த ஆண்டவன் இயேசுவின் தாயல்லவா நம் மடு அன்னை! தனயனின் அதே வார்த்தைகளை தாயும் கூறி அழைக்கின்றாள். அந்த அன்னையின் அருகில் இருக்க, அவளது பாதத்தில் அமர்ந்து தம் குறைகளைச் சொல்ல, அவளது தாயன்பில் திழைத்திருக்க அவளது பிள்ளைகள் இலங்கையின் நாலா திசைகளில் இருந்தும் வந்து குவிகின்றார்கள். அன்னையிடமிருந்து ஆறுதலையும் தேறுதலையும் பெறுகின்றார்கள்.

> இனமத பேதமின்றி மக்கள் ஒன்றுசேர்ந்து வந்த ஒரு தாய் மக்களாக ஒரே குடையின்கீழ் நிற்பது மடுத்திருப்பதி யில்தான். ஆகவேதான் அன்று தொட்டு இன்றுவரை மடுத்திருப்பதி இந்த நாட்டு மக்கள் மத்தியல் ஒற்றுமையை, ஒன்றிப்பை, சமாதானத்தை ஏற்படுத்துவதில் பாரிய பங்களிப்பை ஆற்றிவருகின்றது. ஒருவர் மற்றவரை எதிரியாக நினைத்துக்கொண்டு இருக்கும் சூழ்நிலையில் ஒருவர் மற்றவரைப் பார்க்க, சிரிக்க, பேச, புரிந்துகொள்ள தக்கதோர் தளமாக மடுத்திருப்பதி விளங்குகின்றது.

**ஆன்மீகப் புதுப்பித்தல்:**

மடுத்திருப்பதிக்கு வருவோரிடம் ஓர் ஆழமான ஆன்மீகப் புதுப்பித்தல் நடைபெறுவது ஒரு சிறப்பான அம்சமாகும். இதற்கான அகச்சூழலும் புறச்சூழலும் மடுத்திருப்பதியிலே நிறைவாக அமைந்துள்ளன. வெறும் பொழுதுபோக்கிற்காகவோ, அல்லது கேளிக்கைக்காகவே மக்கள் இங்கு வருவதில்லை. தமது ஆன்மீக வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தவேண்டும், புதிய வாழ்வைக் காண வேண்டும் என்ற தாகத்தோடும் வேகத்தோடும்தான் மக்கள் இத்திருப்பதியை நோக்கி வருகின்றார்கள்.

இத்திருத்தலத்தின் நுழைவுப் பகுதியை அண்மித்தவு டனேயே திருப்பயணிகள் செபமாலையைச் செபிக்க ஆரம்பித்துவிடுவார்கள். அல்லது தேவதாய்க்கு பாடல்களைப் பாடத்தொடங்கிவிடுவார்கள். மிகுந்த பக்தி சிரத்தையோடு மடு அன்னையின் புண்ணிய பூமியிலே தம் பாதங்களைப் பதிப்பார்கள்.

இத்திருப்பதியிலே தங்கியிருக்கும் நாட்களில் தங்களுடைய அதிகமான நேரங்களை அன்னையின்

பாதத்தில் அமர்ந்திருந்து செபமாலை செபிப்பதிலே செலவிடுவார்கள். எல்லாவற்றையும்விட மேலாக ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்று அன்னையின் திருத்தலத்தில் ஓர் ஆன்மீகப் புதுப்பித்தல் அனுபவத்தைப் பெறுகின்றார்கள்.

ஒவ்வொரு நாள் நவநாள் வழிபாட்டுக்குரிய கருப் பொருட்கள் மிகவும் கவனமாகத் தேர்வுசெய்யப்பட்டு அதன் அடிப்படையில் காலைத் திருப்பலியும், மாலை நற்கருணை ஆராதனையும் மறையுரையும் இடம்பெறும். ஒவ்வொரு நாளும் மூன்று வேளையும் ஒலிபெருக்கி ஊடாக செபமாலை ஒலித்துக்கொண்டே இருக்கும். அன்னையைப் புகழும் பாடல்கள் காற்றில் கலந்து வந்துகொண்டே இருக்கும். இப்பதியில் தங்கியிருக்கும் நாட்களில் திருப்பயணிகள் ஆன்மீகப் பாதையில் வழிநடத்தப்படுகின்னறார்கள். இப்பதியிலிருந்து தமது இல்லிடம் நோக்கிச் செல்லும்போது ஒரு ஆன்மீகப் புதுப்பித்தல் அனுபவத்தோடுதான் அவர்கள் செல்கின்றார்கள்.

**மடுத்திருப்பதி ஓற்றுமையினதும் ஒன்றிப்பினதும் மையம்**

மடுத்திருப்பதி ஓற்றுமையினதும் ஒன்றிப்பினதும் மத்திய நிலையமாகத் திகழ்கின்றது. ஆம்! எக்குலத்தவராயினும், எம்மொழியினராயினும், எவ்வினத்தவராயினும் அனைவரும் இறைவனின் பிள்ளைகளே என்ற உணர்வுடன் இத்திருப் பதி அனைத்து மக்களையும் வரவேற்கின்றது.

இத்திருப்பதியின் நுழைவாயிலில் அமைந்துள்ள மடு அன்னையின் திருச்சுருபம் "வரவேற்பு மாதா" என்று அழைக்கப்படுகின்றது. மடு அன்னை இரு கரங்களையும் விரித்தவளாய் தன் திருப்பதி நோக்கி வரும் அனைவரை யும் தன் கைகளை நீட்டி அழைக்கும் தோற்றத்தோடு விளங்குவது கண்ணுக்கினிய காட்சியாகும்.

எல்லா மக்களையும் வரவேற்று ஒன்றுசேர்க்கும் இடமாக - ஒற்றுமையினதும், ஒன்றிப்பினதும் மையமாக இத்திருப்பதி திகழ்கின்றது. யுத்தம் முடிவடைந்துவிட்டது என்று சொல்லப்பட்டாலும் யுத்தத்தின் சத்தங்கள் மட்டும்தான் ஓய்ந்துள்ளன. யுத்தத்தின் வடுக்கள் இன்னும் மாறவில்லை. மனக்காயங்கள் இன்னும் ஆறவில்லை. இந்நிலையில் மக்கள் மத்தியில் மன்னிப்பு, ஒப்புரவு, சமாதானம் போன்ற உயர்ந்த விழுமியங்களை ஏற்படுத்துவற்கு அவர்கள் ஒன்றுசேரக்கூடிய ஒரே இடம் இந்த நாட்டில் மடுத்திருப்பதிதான்.

மடுத்திருப்பதியில் வருடம் தோறும் ஒன்று, சேரும் பக்த கோடிகளில் கூடுதலானவர்கள் பிற மத சகோதரர்களும் சிங்கள சகோதரர்களுமே ஆவர் .

நாட்டின் அணைத்து பகுதிகளில் இருந்தும் மக்கள் அலை அலையாக ஒன்று கூடுவர்

இனமத பேதமின்றி மக்கள் ஒன்றுசேர்ந்து வந்த ஓரு தாய் மக்களாக ஓரே குடையின்கீழ் நிற்பது மடுத்திருப்பதியில்தான். ஆகவேதான் அன்று தொட்டு இன்றுவரை மடுத்திருப்பதி இந்த நாட்டு மக்கள் மத்தியல் ஒற்றுமையை, ஒன்றிப்பை, சமாதானத்தை ஏற்படுத்துவதில் பாரிய பங்களிப்பை ஆற்றிவருகின்றது. ஒருவர் மற்றவரை எதிரியாக நினைத்துக்கொண்டு இருக்கும் சூழ்நிலையில் ஒருவர் மற்றவரைப் பார்க்க, சிரிக்க, பேச, புரிந்துகொள்ள தக்கதோர் தளமாக மடுத்திருப்பதி விளங்குகின்றது.

**நிறைவாக**

மருதமடு மாதாவே மனுக்குலத்தின் தாயாரே கருணைஅருட் செபமாலை கனிந்திட நாம் செய்தாயே!" காற்றில் கலந்துவரும் இக்கானத்தைக் கேட்கும்போதெல்லாம் மடுத்திருத்தலத்தின் நினைவுகள் நம் நெஞ்சில் நிழலாடும். மடு அன்னையின் மாறாத தாயன்பிலே நம் உள்ளம் உறவாடும். ஆம்! மடு அன்னை மனுக்குலத்தின் தாய்தான்! பாவப்பட்ட இம்மனுக்குலத்திற்கு அவள்தான் நம்பிக்கை நட்சத்திரம்.

**"பவம் செய்தோம் பாரினிலே**
**தவம் செய்தோம் உன் தயவால்.**
**பட்சமுடன் பாரம்மா, பாவியெம்மைக் காரம்மா!"**

இந்த வரிகள் பாவ நாட்டத்தால் சீரழிக்கப்பட்ட மான-டத்தின் உள்ளக் குமுறல், பாவத்தில் சிக்குண்டு தவிக்கும் மனுக்குலத்தின் இதய ஓலம்! தாயைச் சரணடையும் ஒரு சேயின் உணர்ச்சிமிக்க உச்சரிப்புக்கள்!

ஊதாரி மகனாய் - ஊதாரி மகளாய் அலைந்து திரியும் இந்த மானிடத்திற்கு மரியன்னையின் தாயன்பே ஒரே நம்பிக்கை! ஆம் அவள்தான் பாவிகளின் அடைக்கலம்! நமக்காக இறைவனிடம் பரிந்து பேசும் முதன்மையான பரிந்துரையாளர்.

கன்னி மரியாள் களங்கமற்ற நீர்ச்சுனை. இறைமகனையே தன் உதரத்தில் சுமந்த திருப்பேழை. கடவுளையே தாங்கி நின்ற பதிர்ப்பாத்திரம். ஆன்மாவோடும் உடலோடும் விண்ணேற்றமடைந்த அன்னை மரியாவுக்கு மடுப்பதியில் பெருவிழா.

அலகையை வென்று அகிலத்தைக் காத்த அந்த அன்னைக்கு இறைவன் அளித்த அன்புப்பரிசு அவரை விண்ணகத்திற்கு அழைத்துக்கொண்டது.

தாய் விண்ணேறிச் சென்றால் சேய்கள் நமக்கெல்லாம் அது பெருவிழாதானே! அதனால்தான் மடுத்திருப்பதி விழாக்கோலம் பூண்டுள்ளது. மக்கள் வெள்ளத்தினால் நிரம்பி வழிகின்றது.

மருதமடு மாதாவே மனுக்குலத்தின் தாயாரே என்ற கான வரிகள் காற்றில் என்றும் கலக்கட்டும். அதன் வழி மடுத்தாயின் புகழ் என்றும் நிலைக்கட்டும் ■

**- அருட்திரு தமிழ் நேசன் அடிகளார்**



# ஒலிம்பிக் கோலாகலமாக நிறைவு

## 2016இல் பிரேசில் றியோடி ஜெனிரோவில்




உலகின் அதிவேக மனிதரான உசைன் போல்ட்டின் சாதனை, அமெரிக்க நீச்சல் ஜாம்பவான் மைக்கேல் பெல்ப்ஸின் பதக்க சாதனை மற்றும் ஓய்வு, பல்வேறு உலக சாதனைகள் மற்றும் ஒலிம்பிக் சாதனைகளுடன் முடிவுக்கு வந்தது 30ஆவது ஒலிம்பிக் போட்டி.

தொடக்க நிகழ்ச்சியைப் போலவே, நிறைவு விழாவும் கண்கவர் கலை நிகழ்ச்சிகள், வாணவேடிக்கை உள்ளிட்டவற்றுடன் பிரமாண்டமான முறையில் நடைபெற்றது.

பயங்கரவாதிகளின் மிரட்டல் உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகளையும் தாண்டி ஒலிம்பிக் போட்டி வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் நவீன ஒலிம்பிக்கை 3 முறை நடத்திய ஒரே நகரம் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க பெருமையைப் பெற்றுள்ளது லண்டன் நகரம்.

அமெரிக்க நீச்சல் வீரரான மைக்கேல் பெல்ப்ஸ், இந்த ஒலிம்பிக்கில் 4 தங்கம் உள்பட மொத்தம் 6 பதக்கங்களை வென்றார். இந்த ஒலிம்பிக்கில் அவர் 3-வது பதக்கத்தை வென்றபோது ஒலிம்பிக்கில் அதிக பதக்கம் வென்றவரான சோவியத் யூனியன்




ஜிம்னாஸ்ரிக் வீராங்கனை லாரிசாவின் சாதனையை முறியடித்தார். மூன்று ஒலிம்பிக் போட்டியையும் சேர்த்து 18 தங்கம் உள்பட 22 பதக்கங்கள் வென்று புதிய சாதனை படைத்த பெல்ப்ஸ் இந்த ஒலிம்பிக்கோடு ஓய்வு பெற்றார்.

உலகின் அதிவேக வீரரான ஜமைக்காவின் உசைன் போல்ட் 100 மீ., 200 மீ., 100 மீ. தொடர் ஓட்டம் ஆகியவற்றில் தங்கப் பதக்கத்தை தக்க வைத்து வரலாறு படைத்தார். மகளிர் 100 மீ. தொடர் ஓட்டத்தில் அமெரிக்க அணி உலக சாதனையைப் பதிவு செய்தது.

ஒலிம்பிக் மகளிர் நீச்சல் போட்டியில் அமெரிக்காவின் 17 வயது வீராங்கனை மிஸ்ஸி ஃபிராங்கின் 4 தங்கம் வென்று சாதனை படைத்தார். இதன்மூலம் அவர் உலக ரசிகர்களுக்கு பரிட்சயமானார். முதல்முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட மகளிர் குத்துச் சண்டை போட்டியில் பிரிட்டனின் நிகோலா ஆடம்ஸ் தங்கம் வெனறார்.

சவுதி அரேபியா, கத்தார், புருணை ஆகிய நாடுகள் முதல் முறையாக வீராங்கனைகளை



போட்டிக்கு அனுப்பின. இரு கால்களையும் இழந்தவரான தென் ஆப்பிரிக்காவின் ஆஸ்கார் பிஸ் டோரியஸ் 400 மீ. ஓட்டம், 400 மீ. தொடர் ஓட்டம் ஆகியவற்றில் பங்கேற்று பார்வையாளர்களை ஆச்சரியப்படுத்தினார். 400 மீ. ஓட்டத்தில் அரையிறுதி வரை முன்னேறினார். 400 மீ. தொடர் ஓட்டத்தில் பிஸ்டோரியஸ் அணி இறுதிச்சுற்று வரை முன்னேறியது.

பதக்கப் பட்டியலில் முதல் 10 நாள்கள் வரை சீனாவே முதலிடத்தில் இருந்தது. ஆனால் தடகள போட்டிகளில் வழக்கம்போல் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்தவே, சீனா 2-வது இடத்துக்குத் தள்ளப்பட்டது.

இந்தியாவில் இருந்து 13 விளையாட்டுகளில் 53 பிரிவுகளில் 83 பேர் பங்கேற்றனர். இதில் துப்பாக்கி சுடுதலில் ககன் நரங் வெண்கலமும், விஜ குமார் வெள்ளியும் வென்றனர். பாட்மிண்டன் சாய்னாவும், குத்துச் சண்டையில் மேரி கோமும் வெண்கலம் வென்றனர். மல்யுத்தத்தில் யோகேஷ்வர் தத் வெண்கலமும், சுஷில்குமார் வெள்ளிப் பதக்கமும் வென்றனர்.

மொத் தத்தில் இந்தியா 6 பதக்கங்களை வென்றதால் லண்டன் ஒலிம்பிக் இந்தியாவுக்கு மிகச் சிறந்த போட்டியாக அமைந்தது.

**2016 ஒலிம்பிக்**

31ஆவது ஒலிம்பிக் போட்டி பிரேசிலின் றியோ டிஜெனிரோவில் 2016ஆம் ஆண்டு நடைபெறவுள்ளது.

# ஜிம்னாஸ்ரிக்நடனம்: ரஷ்யாவுக்கு தங்கம்

லண்டன் ஒலிம்பிக் போட்டியில் இசைக்கேற்ப விளையாடும் ஜிம்னாஸ்ரிக் பிரிவில் ரஷ்ய வீராங்கனைகள் தொடர்ச்சியாக நான்காவது முறையாக தங்கம் வென்றுள்ளனர்.

லண்டன் ஒலிம்பிக்கில் இசைக்கேற்றவாறு விளையாடும் ஜிம் னாஸ்ரக்குக்கான பிரிவில் போட்டிகள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

இந்த போட்டியில் இசைக் கேற்றவாறு கயிறு, வளையம், பந்து, நாடா ஆகியவற்றைலாவகமாக பிடித்து, அதே நேரத்தில் அழகான நடனமும் ஆடி தங்கள் திறமையை வெளிப்படுத்தும் அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும்.

இந்த போட்டியில் ரஷ்ய அணியினர் சிறப்பான முறையில் நடனமாடி, தங்கள் திறமையை நிருபித்து, நடுவர்களை கவர்ந்தனர். இதனால் அந்த அணி தங்க பதக்கத்தை தட்டிச் சென்றது. ரஷ்ய அணி கடந்த 2000ஆம் ஆண்டு நடைபெற்ற சிட்னி ஒலிம் பிக் முதல் தற் போது வரை 4 பதக்கங்களை தொடர்ச்சியாக வென்றுள்ளது. இதற்கு அடுத்தபடியாக பெலாரஸ் அணி வெள்ளிப் பதக்கத்தையும், இத்தாலி அணி வெண்கல பதக்கத்தையும் வென்றது.



# பதக்கத்தை புறக்கணித்த வீரர்

பதக்கம் வழங்கும் நிகழ்ச்சியைப் புறக்கணித்த தென் கொரிய உதைபந்தாட்ட வீரர் பார்க் ஜோங்வூ மீது நடவடிக்கை எடுக்க சர்வதேச ஒலிம்பிக் சங்கமும், சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனமும் முடிவு செய்துள்ளது.

ஒலிம்பிக் உதைபந்தாட்ட போட்டியில் வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் தென் கொரியா - ஜப்பான் அணிகள் மோதின. இதில் 2-1 என்ற கோல் கணக்கில் தென் கொரியா வென்றது.

ஆட்டம் முடிந்த உடன் தென் கொரிய வீரர் பார்க் ஜோங்வூ, ஓர் வாசக அட்டையுடன் மைதானத்தில் வலம் வந்தார். தென்கொரியா - ஜப்பான் கடல் பகுதியில் உள்ள சில தீவுகள் யாருக்கு சொந்தம் என்பதில் பிரச்சினை உள்ளது. அதில் தென் கொரியாவுக்கு ஆதரவான வாசகங்களை எழுதிய அட்டையை பார்க் மைதானத்தில் காண்பித்தார். இது பரபரப்பை ஏற்படுத்தியது.

தொடர்ந்து நடைபெற்ற பதக்கம் வழங்கும் நிகழ்ச்சியிலும் அவர் பங்கேற்கவில்லை. இதனால் பெரும் சர்ச்சை ஏற்பட்டது. இதையடுத்து அவர் மீது நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

# சீனாவுக்காக பதக்கம் வென்ற திபெத்திய வீராங்கனை

ஒலிம்பிக்கில் சீனா சார்பில் பங்கேற்று பதக்கம் வென்றார் திபெத் வீராங்கனை குயியாங் ஷின்ஜி.

மகளிர் 20 கிலோ மீற்றர் நடைப் போட்டியில் பங்கேற்ற அவர் வெண்கலம் வென்றார். இந்த ஒலிம்பிக்கில் திபெத்தைச் சேர்ந்த ஒருவர் இப்போதுதான் முதல முறையாக பதக்கம் வென்றுள்ளார்.


ஷின்ஜி சீனா சார்பில் பங்கேற்றாலும் திபெத்தைச் சேர்ந்த பலர் அவருக்கு ஆதரவு தெரிவித்து கோஷம் எழுப்பினர். சீனாவில் தடை செய்யப்பட்ட திபெத் தேசிய கொடியை கையில் எந்தி வந்த திபெத்தியர்கள் ஷின்ஜியை உற்சாகப்படுத்தி கோஷம் எழுப்பினர். அதே நேரத்தில் சீனாவின் செங்கொடியுடன் சீன நாட்டு ரசிகர்களும் ஷின்ஜிக்கு ஆதரவு தெரிவித்தனர். திபெத்தை சீனா தனது ஆக்கிரமிப்பில் வைத்துள்ளது.

சீனாவின் ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து திபெத் தியர்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆரோக்கிய நாதம்




நீரிழிவு நோய் என்பது, உடலால் உணவிலிருந்து தேவையான சக்தியை எடுக்கவேண்டிய முறையில் எடுக்கமுடியாமலிருப்பதாகும். உடல் போதியளவு இன்சுலினை சுரக்காமலிருப்பதனால் அல்லது சுரக்கப்படும் இன்சுலின் தகுந்த முறையில் வேலை செய்யாமலிருப்பதனால் ஆகும். இன்சுலின் ஒரு முக்கியமான ஹோர்மோன். உணவிலிருந்து எமது உயிரணுக்கள் சீனிச் சத்தை உறிஞ்ச உதவி செய்வதற்கு எமக்கு இன்சுலின் தேவைப்படுகிறது. பின்பு உயிரணுக்கள் சீனிச் சத்திலிருந்து சக்தியை உண்டாக்குகின்றன. சில சமயங்களில் உயிரணுக்கள் இன்சுலி



னுக்குப் பிரதிபலிப்பைக் காண்பிக்காது. இதுவும் நீரிழிவு நோயை ஏற்படுத்தலாம்.

**ஒருவருக்கு நீரிழிவு நோய் ஏற்படும்போது அவரது உடலில் என்ன சம்பவிக்கிறது?**

நீரிழிவு நோயுள்ள ஒருவர், அத்தியாவசியமான இன்சுலின் ஹோர்மோன் சுரப்பதை நிறுத்திவிடுகிறார் அல்லது அந்த நபரில் இன்சுலின் தகுந்த முறையில் வேலை செய்வதில்லை. ஹோர்மோன் என்பது, உடலின் பாகங்கள் என்ன செய்யவேண்டும் என்று சொல்வதற்காக உடலின் ஒரு பாகத்திலிருந்து மற்றொரு பாகத்துக்குப் பிரயாணம் செய்யும் ஒரு இரசாயனத் "தூதுவர்" ஆகும்.

நாம் உண்ணும் உணவிலுள்ள சீனிச் சத்தை, சக்தியாக மாற்றுவதற்கு நமது உடல் இன்சுலினை மாத்திரமே உபயோகிக்கமுடியும். அங்கு இன்சுலின் இல்லாவிட்டால், உயிரணுக்களால் சீனிச் சத்தை சக்தியாக மாற்றமுடியாது. "உபயோகிக்கப்படாத" சீனிச் சத்து இரத்தத்தில் ஒன்று சேர்க்கப்பட்டு சிறுநீர் மூலமாக உடலிலிருந்து வெளியேற்றப்படும்.

பின்வருவனவற்றிற்கு எமக்குச் சக்தி தேவை:

எமது உடல் வெப்பத்தை உற்பத்திசெய்வதற்கு.

எமது தசைகள் வேலை செய்வதற்கு, எமது இதயங்கள் துடிப்பதற்கு, எமது நுரையீரல்கள் சுவாசிப்பதற்கு, எமது மூளை சிந்திப்பதற்கு

எமது உடலிலிருக்கும் கோடிக்கணக்கான உயிரணுக்களை வளர அனுமதிப்பதற்கு, புதிப்பிப்பதற்கு, மற்றும் சீர் செய்வதற்கு

இன்சுலின் இல்லாமல் நம்மால் தொடர்ந்து வாழ முடியாது

இன்சுலின் கணையத்தில் உற்பத்தியாகிறது.

**கணையம்:** வயிற்றுக்கு சற்றுப் பின்னால் இந்த உறுப்பு அமைந்திருக்கிறது. கணையத்திலுள்ள பீட்டா உயிரணுக்கள் என்றழைக்கப்படும் விசேட உயிரணுக்கள் இன்சுலினைச் சுரக்கின்றன. பீட்டா உயிரணுக்கள் இலங்கர்கான் சிறு தீவுகள் என்று பெயரிடப்பட்ட திசுக்களின் கூட்டத்தில் காணப்படுகின்றன.

**நீரிழிவு வகைகள்**

நீரிழிவு நோய் என்பது உடல், உணவிலிருந்து சக்தியை உறிஞ்சிக்கொள்ளமுடியாத நிலைமையிலிருக்கும் ஒரு நோயாகும்.

**உயிரணுக்கள்**

உணவிலிருந்து சீனிச் சத்தை உறிஞ்சி சக்தியை உண்டாக்க உதவி செய்வதற்கு உடலுக்கு இன்சுலின் தேவைப்படுகிறது.

**வகை-1** நீரிழிவு நோயில், உடல் இன்சுலினைச் சுரப்பதில்லை. இன்சுலின் ஊசி மருந்துகள், இரத்தத்தில் சீனிச் சத்தின் அளவைக் கண்காணித்தல், மற்றும் ஒரு உணவுத் திட்டத்தைப் பின்பற்றுதல் மூலமாக, வகை-1 நீரிழிவு நோய்க்கு சிகிச்சையளிக்கப்படுகிறது.

**வகை-2** நீரிழிவு நோயில், பெரும்பாலும் உடலால் கொஞ்சம் இன்சுலினைச் சுரக்கமுடியும். ஆயினும், அது போதுமானதல்ல அல்லது நன்கு வேலை செய்வதில்லை. ஆரோக்கியமான உணவு, உடற்பயிற்சி, எடையைக் குறைத்தல், மற்றும் சில வேளைகளில் மருந்துகள் என்பனவற்றின் இணைந்த செயற்பாட்டினால் வகை -2 நீரிழிவு நோய் சமாளிக்கப்படுகிறது.

பல்வேறுவகைப்பட்ட நீரிழிவு நோய்கள் இருக்கின்றன. ஆனால் பிள்ளைகளும் பதின்ம வயதினரும் வகை-1 நீரிழிவு நோயை பெறுகிறார்கள். வகை 1 நீரிழிவு நோயில், பீட்டா உயிரணுக்கள் அழிக்கப்பட்டுவிடும். அதனால் உடலினால் எந்த இன்சுலினையும் சுரக்க முடியாது.

அதிகமான பதின்ம வயதினர் வகை-2 நீரிழிவு நோயைப் பெறுகிறார்கள். இந்த வகையான நீரிழிவு நோயுடன், பெரும்பாலும் உடலால் கொஞ்சம் இன்சுலினைச் சுரக்கமுடியும். ஆயினும், இரத்தத்தில் சீனிச்சத்தின் அளவை இயல்பு நிலையில் வைத்துக் கொள்ள அல்லது போதுமானளவு நன்கு வேலை செய்வதில்லை அல்லது அதன் அளவு போதுமானதாக இருப்பதில்லை.

**நீரிழிவு நோய்க்கான சிகிச்சை**

நீரிழிவு நோய்க்கான சிகிச்சைக்கு இரண்டு இலக்குகள் இருக்கின்றன. ஒன்று, உங்கள் பிள்ளை ஆரோக்கியமாக இருப்பதற்காகவும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சிக்கல்களைத் தவிர்ப்பதற்காகவும், முடிந்தளவு இயல்பு நிலைக்கு அருகாமையில் இரத்தத்தில் சீனிச்சத்தின் அளவை நிலைநாட்டி அதைத் தக்க வைத்துக் கொள்வதாகும். இரண்டாவது, நீண்ட கால, ஆரோக்கியமான மற்றும் செழிப்பான வாழ்க்கையை வாழ்வதற்காக, உங்கள் பிள்ளை நீரிழிவு நோயுடன் வாழப் பழகிக்கொள்வதாகும்.

வகை-1 நீரிழிவு நோய்க்கான சிகிச்சை

வகை-1 நீரிழிவு நோய்க்கான அடிப்படைச் சிகிச்சை உலகம் முழுவதும் ஒரே மாதிரியானது. அது பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

ஒரு நாளில் பல முறைகள் இன்சுலின் ஊசிமருந்தை எடுத்துக்கொள்வது, அல்லது உணவு நேரங்களில் மேலதிக மருந்தையும் மற்ற நேரங்களில் இன்சுலினை ஒரே சீராக வழங்கும் ஒரு கருவியை உபயோகித்தல்

ஒரு நாளில் பல முறைகள் இரத்தத்தில் சீனிச்சத்தின் அளவைக் கண்காணித்தல்

ஒரு உணவுத் திட்டத்தைப் பின்பற்றுவது

மேலதிக நடவடிக்கைகளின் போது அதை மேலதிக உணவுடன் அல்லது சில வேளைகளில் குறைந்தளவு இன்சுலினுடன் ஈடு செய்வது


இந்த அடிப்படை வடிவமைப்புக்குள், வித்தியாசப்பட்ட உடல் நலப் பராமரிப்புக் குழுக்கள், உங்கள் பிள்ளையின் குறிப்பிட்ட தேவைகள் மற்றும் வீட்டில் உங்கள் குடும்பத்தின் வழக்கமான வேலைகளுக்கும் பொருந்தக்கூடிய ஒரு திட்டத்தை உருவாக்குவதற்காக உங்கள் குடும்பத்துடன் பணியாற்றுவார்கள். ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, வழக்கமான பரிசோதனைகளுக்காக உங்கள் பிள்ளையை மருத்துவமனைக்குக் கொண்டுவரும்படி கேட்கப்படுவீர்கள். இந்த மருத்துவமனைச் சந்திப்புக்களின்போது, உங்களுக்கு இருக்கும் ஏதாவது கவலைகள் பற்றி நீரிழிவுப் பராமரிப்புக் குழுவுடன் நீங்கள் கலந்து பேசலாம்.

**வகை 2 நீரிழிவு நோய்க்கான சிகிச்சை**

ஆரோக்கியமான உணவு, உடற்பயிற்சி, எடையைக் குறைத்தல், மற்றும் அநேக இளைஞருக்கு மருந்துகள் என்பனவற்றின் இணைந்த செயற்பாட்டினால் வகை-2 நீரிழிவு நோய் சமாளிக்கப்படுகிறது. பெரும்பாலும் எல்லோருக்கும் சிகிச்சை, வாழ்க்கைப்பாணியில் ஒரு மாபெரும் மாற்றத்தை உட்படுத்துகிறது.

முழுக் குடும்பத்தினரும் வகை- 2 நீரிழிவு நோயைப் பற்றிக் கற்றுக் கொண்டு அதே ஆரோக்கியமான வாழ்க்கைப் பாணியைப் பின்பற்றினால், பதின்ம வயதினருக்கு மிகச் சிறந்த வெற்றி வாய்ப்பு கிடைக்கும். அது உங்கள் பதின்ம வயதினருக்கு மிகப் பெரிய ஆதரவின் ஊற்று மூலமாக இருக்கும். அத்துடன், குடும்பத்தின் மற்ற அங்கத்தினரும் நீரிழிவு நோய் ஏற்படும் அதிக அபாயத்தில் இருந்தாலும், நீரிழிவு நோயை விருத்தி செய்து கொள்ளும் அபாயத்தை அது குறைக்கக்கூடும்.

உணவுக் கட்டுப்பாடும் உடற்பயிற்சியும் மாத்திரமே இரத்தத்தில் சீனிச் சத்தின் அளவைக் கட்டுப்படுத்தாதிருக்கும்போது, உடலில் இன்சுலின் நன்கு வேலை செய்ய உதவி செய்யக்கூடிய மாத்திரைகளை மருத்துவர் மருந்துக் குறிப்பெழுதிக் கொடுக் கக்கூடும். சில இளைஞருக்கு இன்சுலின் ஊசி மருந்தும் தேவைப்படலாம். ஆரோக்கியமான உணவு, ஒழுங்கான உடற்பயிற்சி, மற்றும் ஒரு ஆரோக்கியமான எடையை இலக்கு வைத்து அடைவதற்குக் கவனம் செலுத்த வேண்டியது அவசி யமாகும். மாத்திரைகள் மற்றும் இன்சுலி னும் மாத்திரம் போது மானதாக அமையாது. இவை வகை-2 நீரிழிவு நோயின் சிகிச்சைக்கான மூலைக் கற்களாகும்.







இங்கிலாந்தின் விலங்குகள் என்கிற பாட்டையும் அவற்றிடையே பரவச் செய்தன. புரட்சியைப் பற்றிய உண்மைச் செய்திகள் இங்கிலாந்தின் விலங்குகளிடையே இப்படிப் பரவலாயின. திருவாளர் ஜோன்சன் விலிங்டன் கிராமத்தில் ஒரு மதுக்கடையில் தன் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தான். ஒன்றுக்கும் உதவாத விலங்குகள் ஒன்று சேர்ந்து கொண்டு தன்னைத் தன் சொந்தப் பண்ணையிலிருந்து விரட்டி விட்டதாகவும், தனக்கு மகத்தான அநீதி இழைக்கப்பட்டு விட்டதாகவும் அவன் பலரிடம் வாய் ஓயாமல் சொல்லிக்கொண்டிருந்தான். மற்ற பண்ணையாளர்களும் குடியானவர்களும் கொள்கையளவில் அவன் கட்சிதான். ஆனால் அவர்கள் முதலில் அவனுக்கு அதிகமாக உதவி எதுவும் செய்யவில்லை. மனதிற்குள் அவர்கள் எல்லோருக்கும் திருவாளர் ஜோன்சின் துரதிருஷ்டத்தைத் தங்களுக்கு லாபகரமானதாக எப்படி உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்கிற எண்ணமே மேலோங்கி நின்றது. விலங்குகள் பண்ணைக்கு அருகே இருந்த இரு பண்ணைகளின் சொந்தக்காரர்கள் சதா ஒருவரோடொருவர் விரோதம் பாராட்டிக் கொண்டிருந்தார்கள். இது விலங்குகளின் பண்ணைக்குச் சாதகமாக இருந்தது. இந்த பண்ணைகளில் பாக்ஸ்வுட் என்ற பெயருள்ள ஒன்று பெரிய பண்ணை. ஆனால் அது சரிவரக் கவனிக்கப்படாமல் இருந்தது. மிகவும் பழமையான முறையில் நடத்தப்பட்டு வந்தது. அதிலே பெரும்பகுதி காடாகத்தான் இருந்தது. அதிலே அதிகமாகப் புல் விளைவதில்லை. அதன் வேலிகள் பல இடங்களில் அழிந்துவிட்டன. அந்த மாதிரி வேலிகள் இருப்பதே அவமானகரமான விஷயம் என்றுதான் சொல்ல வேண்டும். அதன் சொந்தக்காரன் பில்கிங்டன், தன்னையோ பிறரையோ அதிகமாக சிரமப்படுத்திக் கொள்ளாமல் பண்ணையை நடத்தி வந்தான். அவன் பொழுதில் பெரும்பகுதி, பருவத்திற்கேற்றபடி மீன் பிடிப்பதிலும் வேட்டையாடுவதிலும் கழிந்துவிடும். மறுபக்கம் இருந்த பண்ணையின் பெயர் பிஞ்ச்பீல்டு அது பாக்ஸ்வுட்டை விட நன்றாகவும் நடத்தப்பட்டு வந்தது. அதன் சொந்தக்காரன் பெயர் பிரடெரிக். அவன் அழுத்தமானவன். கெட்டிக்காரன். எப்போதும் ஏதாவது வியாஜ்ஜியத்தில் ஈடுபட்டிருப்பான். பேரம் செய்வதிலே வல்லவன் என்று புகழ் பெற்றவன். பிஞ்ச்பீல்டுக்கும் பிரடெரிக்குக்கும் ஆகவே ஆகாது. ஒருவரிடம் மற்றொருவருக்கு இருந்த வெறுப்பு காரணமாக அவர்கள் எந்த விஷயம் பற்றியும் எவ்விதமான ஏகோபித்த முடிவுக்கும் வந்து எதுவும் செய்யமாட்டார்கள்.


(நாளை...)

## வரைவோம் வாருங்கள்!



# சிறுவர் அமுதம்

## அற்புதப் படைப்பு தும்பி



பூச்சியினங்களில் தும்பியினங்களே கூரிய பார்வைத் திறன் கொண்டவை. அதன் விசாலமான இரண்டு கண்களிலும் 30,000 லென்ஸ்கள் காணப்படுகின்றன. அதாவது தும்பிகளிடம் நாம் காணும் இரண்டு கண்களுக்கு உள்ளே மொத்தமாக 30,000 சிறிய கண்கள் காணப்படுகின்றன. இந்த ஒவ்வொரு கண்ணும் துல்லியமான முறையில் செயற்பட்டு காட்சிகளை அப்படியே பிரதி பண்ணி மூளைக்கு அனுப்பிக் கொண்டிருக்கின்றன. எனவே பல மீற்றர்கள் தூரத்தில் இருக்கும் சிறிய அசையாப் பொருளாயினும் இவற்றால் எளிதாகவும் விரைவாகவும் அதனை இனங்காண முடியும்.





**நேற்றைய மனக்கணக்கு விடை**

ஒரு யானை - 5 காசு x 12
யானை = 60
ஒரு குதிரை - 0.75 x 36
குதிரை = 27
ஒரு கழுதை - 0.25 x 52
கழுதை = 13
100 = 100

## எண்கள்

ஒன்று யாருக்கும் தலை ஒன்று
இரண்டு முகத்தில் கண் இரண்டு
மூன்று முக்காலிக்கு கால் மூன்று
நான்கு நாற்காலிக்குக் கால் நான்கு
ஐந்து ஒரு கை விரல் ஐந்து
ஆறு ஈயின் கால் ஆறு
ஏழு வாரத்தின் நாள் ஏழு
எட்டு சிலந்திக்கு கால் எட்டு
ஒன்பது தானிய வகை ஒன்பது
பத்து இருகை விரல் பத்து

## பலூன்



பத்து காசு விலையிலே
பலூன் ஒன்று வாங்கினேன் -
பலூன் ஒன்று வாங்கினேன்
மெது மெதுவா ஊதினேன் -
பலமாய் நானும் ஊதவே
பந்துபோல ஆனது -
பந்து போல ஆனதும்
பலமாய் இன்னும் ஊதினேன் -
பலமாய் நானும் ஊதவே
பானை போல ஆனது -
பானை போல ஆனதை
பார்க்க ஓடி வாருங்கள் -
விரைவில் வந்தால்
பார்க்கலாம் இல்லை -
வெடிக்கும் சத்தம் கேட்கலாம்

## விடுகதைகள்




1.வெள்ளிக் கிண்ணத்தில் தங்க காசு
2.குண்டுச்சட்டியில குதிரை ஓட்டறான்.
3.அம்மா சேலையை மடிக்க முடியாது, அப்பா காசை எண்ண முடியாது.
4.நான் பார்த்தால், பார்ப்பான், சிரித்தால் அவன் சிரிப்பான். அவன் யார்?
5.தண்ணீரில் பிறப்பான் தண்ணீரில் இறப்பான். அவன் யார்?

விடைகள்:
1.முட்டை 2.ஆட்டுக்கல்
3.வானம், நட்சத்திரம்
4.கண்ணாடி 5.உப்பு

சுடோக்கு எண் 28 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 8 | 1 | 6 | 2 | 5 | 7 | 3 | 4 |
| 3 | 6 | 7 | 1 | 4 | 8 | 9 | 5 | 2 |
| 5 | 4 | 2 | 9 | 7 | 3 | 1 | 6 | 8 |
| 4 | 9 | 5 | 8 | 1 | 7 | 6 | 2 | 3 |
| 7 | 2 | 8 | 3 | 6 | 4 | 5 | 1 | 9 |
| 1 | 3 | 6 | 5 | 9 | 2 | 4 | 8 | 7 |
| 8 | 1 | 3 | 7 | 5 | 9 | 2 | 4 | 6 |
| 2 | 5 | 9 | 4 | 8 | 6 | 3 | 7 | 1 |
| 6 | 7 | 4 | 2 | 3 | 1 | 8 | 9 | 5 |

சுடோக்கு எண் 29

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 3 | | | 8 |
| | 2 | | | 8 | | 1 | 3 | |
| | | | 7 | | | 9 | | 6 |
| | | | 3 | | | 6 | | |
| | 1 | 3 | | 2 | | 8 | 5 | |
| | | 5 | | | 8 | | | |
| 1 | | 7 | | | 2 | | | |
| | 6 | 8 | | 3 | | | 9 | |
| 9 | | | 8 | | | | | |

**குழந்தைகளே!**

3 முதல் 12 வயது வரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

ஏதாவதொரு விடயத்தைப் பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

# மாம்பழத் திருவிழாவின் மகத்துவம்

நல்லைக் கந்தன் மகோற்சவத் தொடரில் 22ஆம் நாளாகிய இன்று தண்டாயுதபாணி உற்சவமாகும். இதனை மாம்பழத் திருவிழா என்றும் அழைப்பர். இது மிகவும் சிறப்பாக நடைபெறுவது வழக்கம். பழத்தின் சுவைபோல, உயிர்களிடத்தே ஒன்றிணைந்து நிற்பவன் முருகனே என்ற உண்மையைப் பக்தர்களுக்கு நினைவூ ட்டும் வகையில் இவ்விழா அமைந்துள்ளது என்று சொல்லப் படுகிறது.

பரம பதியாகிய சிவபெருமான் உமாதேவியாரோடும், விநாயகர் முருகன் ஆகியோருடனும் திருக்கயிலாய மலையில் வீற்றிருக்கும் போது நாரத முனிவர் அங்கு வந்து சிவபெருமான் முன்னிலையில் மாம்பழத்தை வைத்து வணங்கினார். சிவபெருமான் மாம்பழத்தை திருக்கரத்தில் எடுத்த பொழுது அதனைத் தங்களுக்குத் தருமாறு விநாயகரும் முருகனும் வேண்டிக்கொண்டனர். "ஒரு நொடியில் இந்த உலகை யார் வலம் வருகிறார்களோ அவர்களுக்கே இந்தப் பழம் உரியது" என சிவபிரான் திருவாய் மலர்ந்தருளினார். அதைக்கேட்ட முருகன் உடனே மயில்மீது ஏறி உலகத்தை வலம்வரத் தொடங்கினார். ஆனால் அறிவால் மூத்த விநாயகர் தாய் தந்தையரை வலம்வந்து வணங்கி "தேவரீர், உலகெலாமாயிருப்பவர் நீரே! உமையன்றி உலகமில்லை, தேவரீரை வலம் வருதல் உலகை வலம்வருதல் ஆகும்" என்று கூறினார். சிவபெருமான் அக்கனியை மகிழ்ச்சியுடன் விநாயகருக்கு அளித்தருளினார்.

முருகன் ஒரு நொடியில் உலகை வலம்வந்து திருக்கயிலாய மலையை சென்றடைந்த போது விநாயகருடைய திருக்கரத்தில் மாங்கனி இருப்பதைக் கண்டார். தனக்கு கனி தரவில்லை என கோபமடைந்தவராக தமது திருவாபரணங்களையும், ஆயுதங்களையும் நீக்கி தண்டாயுதத்தை திருக்கரத்தில் எடுத்துக் கொண்டு கௌபீனம் தரித்து, திருக்கயிலையிலிருந்து நீங்கி திருவாவினன்குடி என்னும் திருத்தலத்திற்குச் சென்று ஞான நன்மலைமீது வீற்றிருந்து அருள் பாலிக்கத் தொடங்கினார். அப்போது சிவபெருமான் உமாதேவியாருடன் இடப வாகனத்தில் ஆரோகணித்து திருவாவினன்குடி திருத்தலத்திற்கு எழுந்தருளினார். முருகன் தம் தாய் தந்தையரை வணங்கினார். அம்மையப்பர் முருகனை அன்போடு அணைத்து "நீயே சிவஞானப் பழமாவாய், உனக்கு வேறுபழம் வேண்டுமோ? -பழத்தின் சுவைபோல உயிர்களிடத்தே ஒன்றிணைந்து நிற்பவன் நீயேயல்லவா! அடியார்களுக்கு உகந்த கனி நீயே ஆவாய்! ஆதலால் பழம் நீ" என்று திருவாய் மலர்ந்தருளினர்.

இவ்வாறு சிவபெருமானும் உமாதேவியாரும் "பழம் நீ" என்று திருவாய் மலர்ந்தமையால் திருவாவினன்குடி திருத்தலம் அன்று முதல் பழநி எனப் பெயர் பெற்றது. முருகப் பெருமானும் பழநி ஆண்டவர் எனப் பெயர் பெற்றார்.

இந்த தத்துவத்தை எடுத்துக் காட்டும் வகையிலேயே இன்றைய மாம்பழத் திருவிழா அமைந்துள்ளது.


(நன்றி: இலங்கையின் புராதன சைவாலயங்கள்)

கூறுடை யாளுங் குன்றாக் குணப்பெருங் குன்று ஞானப்
பேறுடை பழநீ யென்னப் பெயரது மருவி யெங்கள்
ஆறுமா முகவன் வைகும் நகரமு மன்று தொட்டு
வீறுதொல் பழநீ யென்றே விளம்பின வுலக மூன்றும்.

*- பழநி தலபுராணம்.*

# நல்லைக் கந்தன் மகோற்சவம்

## இன்று 22ஆம் நாள் (மாம்பழத் திருவிழா)



### நல்லை வாழும் முருகையனே!

தித்திக்கு மாங்கனிக் காகத் திமிதிமி தித்தியெனத்
தத்தித் தனிநடஞ் செய்யுங் கலாபத் தனிமயில்மேல்
கத்துங் கடல்சூ ழுலகம் வலம்வந்த கான்முளையே
முத்திச் செழுங்கனி யேநல்லை வாழும் முருகையனே!

*-நவாலியூர் சோமசுந்தரப்புலவர் (நல்லையந்தாதி)*

### எங்களுக்கும் தீர்வுக்கனி பெற்றுத்தாரீர்!

எண்ணரிய மாங் கனியைப் பெற்றிடவே
எழில் மயிலில் இளங்குமரன் பறந்துசென்றான்
திண்ணமுடன் உலக மெலாம் சுற்றிவந்தான்
தேமதுரக் கனி யதுவோ கிடைக்கவில்லை
அண்ண னதைப் பெற்றதனால் ஆண்டியானான்
ஆறுபடை வீடுகளில் பழநி சென்றான்
இன்ன முதத் தீர்வுக்காய் ஏங்குகின்றோம்
எங்களுக்கும் அக்கனியைப் பெற்றுத்தாரீர்!

*-மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன்*

### நமை நாடி வருகிறான் நல்லைக் கந்தன்

சிங்கார வேலவன் சின்மய மானவன்
ஆங்காரம் போக்கியே அசுரனை மாய்த்தவன்
நாங்காண நல்லூரில் நமைநாடி வருகின்றான்
தேங்காய் உடைத்து தேவைகளை பெற்றிடுவோம்!

*- செல்வி. தி. அமுதினி, நயினாதீவு*

# சைவமக்களால் சிறப்பாக அனுஷ்டிக்கப்படும் விரதம்

## இன்று ஆடிச் செவ்வாய்

சக்தி வழிபாடு எமது சமய மரபிலே தொன்றுதொட்டு வழிபாடாற்றப்படுகின்ற சிறப்பினை கொண்டமைந்து விளங்குகின்றது. சக்திக்குரிய சிறப்பு வாய்ந்த விரத நாளாக ஆடிச் செவ்வாய் விளங்குகின்றது.

"ஆடிச் செவ்வாய் தேடிப்பிடி" என்ற பழமொழி எம் முன்னோர்களிடத்தே தொன்றுதொட்டு வழக்கத்திலிருந்து வருகின்றமை சிறப்பிற்குரியது. சக்தியை தாய்த் தெய்வமாகப் போற்றி வழிபாடாற்றுகின்ற மரபு எம்மிடையே காணப்படுகின்றது. எமது சமய மரபிலே சக்திக்குரிய வழிபாட்டு மரபு தொன்மை வாய்ந்ததாக விளங்குகின்றது. ஆயும் அறிவும் கடந்த அரணுக்கு தாயும் மகளும் தாரமுமாக விளங்குபவள் அம்பிகை. சிவத்தின் வேறாகாது விளங்கும் சக்தி, அம்பிகை, அம்பாள், பராசக்தி, உலக நாயகி என்னும் பொதுப் பெயர்களினாலும், துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி போன்ற பல சிறப்புப் பெயர்களாலும் போற்றி வழிபடுவது எமது சமய மரபாகும்.

அன்னை பராசக்தியே உலகின் சக்திகளுக்கெல்லாம் ஊற்றாக விளங்குகின்றாள். இச்சக்தியை வீரத்தைத் தரும் துர்க்கையாகவும் கல்வியைத் தரும் கலைமகளாகவும், செல்வத்தை தரும் திருமகளாகவும் நாம் போற்றி வழிபடுகின்றோம்.

**"சக்தியாய் விந்து சக்தியாய்**
**மனோன் மணி தானாகி**
**ஒத்துறு மகேசையாகி யுமை**
**திரு வாணியாகி**
**வைத்துறுஞ் சிவாதிக் கிங்ஙன்**
**உருஞ்சக்தி யொருத்தியாகும்**
**எத்திற நின்றான் ஈசன்**
**அத்தியும் அவளும் நிற்பாள்**

எனச் சிவஞான சித்தியார் பாடலடி சுட்டுகின்றது.

இத்தகைய சிறப்புப் பெறுகின்ற சக்திக்குரிய விரதமாக ஆடிச் செவ்வாய் அமைகின்றது. இத்தினம் அம்பாள் தரிசனத் திற்கான சிறப்பிற்குரிய நாளாக விளங்குகின்றது. விவாகமாகாத கன்னிப் பெண்கள் இத்தினத்திலே விரதமிருந்து அம்பாள் தரிசனத்தின் ஊடாக மாங்கலியப் பாக்கியம் கிடைக்கப் பெறும் என்பது நம்பிக்கையாகும். செவ்வாய் தோஷமுள்ளவர்களும் வாழ்வியற் செல்வங்களை வேண்டுபவர் களும் ஏனையோரும் செவ்வாய்க் கிழமை விரதத்தை ஆடிச் செவ்வாயன்று கோவிலில் சங்கற்பம் செய்து ஆரம்பிப்பது சிறப்பானதாகும். ஒருபொழுது அன்னமோ, பால் பழமோ உண்டு இவ்விரதத்தை கைக்கொள்ளல் உத்தம மாகும்.

ஜாதகத்தில் செவ்வாய் மங்கள காரகன் ஆதலால் ஆடிச் செவ்வாய் தோறும் விரதமிருந்து பெண்கள் இவ்விரதத்தினை திருமணம் கைகூடுவதற்காக அனுஷ்டிப்பதும் வழமையாகும். ஆடி மாதத்தில் வருகின்ற செவ்வாய் தோறும் அம்பிகையை பூசித்து விரதம் அனுஷ்டிப்பது முறையாகும். வேறு நற்கருமங்கள் நிறைவேற வேண்டியும் அம்பிகையை நோக்கி இவ் விரதம் அனுஷ்டித்தல் முறைமையாகும்.

ஆடிச் செவ்வாய் நன்னாளிலே அம்பிகையை நினைத்து மனம் மெய் மொழியினாலே வழிபாடாற்றி வாழ்விற்கு வேண்டிய இன்மை மறுமைப் பயன்களை பெற்று உய்வோமாக!

*சைவப்புலவர் எஸ்.ரி.குமரன்*

### மாம்பழத் திருவிழாவில் காட்சிதரும் முருகா!

மாம்பழத் திருவிழாவில் காட்சிதரும் முருகா
பார்த்திருக்கப் பரவசமே வள்ளி மணாளா
வேர்த்து விறுவிறுக்க ஓடோடி வந்திட்டோம்
கீர்த்திமிக்க வாழ்வருள்வாய் நல்லை வடிவேலா!

*- சிவநெறிக்கலாநிதி இராசையா ஸ்ரீதரன்*

# நேரத்திற்கு மதிப்பளித்தல் எமது கடமையாகும்

மருதனார்மடம்

"எமது வாழ்க்கையில் நேரம் என்பது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். குறிப்பிட்ட நேரத்திற்கு விழாக்கள் ஆரம்பித்தல் வேண்டும். என்னுடைய அனுபவத்தில் விழாக்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு சற்று முன்னரே ஆரம்பிக்கப்பட்டு வந்துள்ளன. எனவே கலைஞர்கள், பிரமுகர்கள், பார்வையாளர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு அரை மணித்தியாலங்கள் முன்னதாக வருகை தர வேண்டும்." என சர்வதேச இந்துமதகுரு பீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாசாரியார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சர்வதேச இந்து மத குருபீடத்தின் 15ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்படவுள்ள இந்து சமய ஆன்மீகப் பெருவிழா சம்பந்தமாக சங்கானையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவர் மேலும் கருத்துத் தெரிவிக்கும் போது இந்து சமயத்திற்காக அரும்பணி ஆற்றி மறைந்த சிவாசாரியார்கள், கல்வி மான்கள், கலைஞர்கள் ஞாபகார்த்தமாக விருதுகள் வழங்கப்பட விருப்பதுடன் இவ்விழாவின்போது சிறப்பு மலர் வெளியீடும் இடம்பெறவுள்ளது என்றும் கூறினார்.

இந்த விழா தொடர்பாக குருபீடத்தின் யாழ் மாவட்ட நிர்வாகப் பணிப்பாளர் பிரம்மஸ்ரீ நித்ய சுதாணந்த சர்மா தகவல் தருகையில் சகல விழா நிகழ்வுகளும் ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாசாரியார் தலைமையில் நடைபெறும் என்றும், விழாவுக்க வருகை தருபவர்கள் சைவாசார சீலர்களாக சைவப் பண்பாட்டுக்கு அமைந்தவகையிலான உடைகளை அணிந்து சமூகம் தர வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் இந்த ஆன்மீகப் பெருவிழா கொழும்பு நகரில் மட்டுமல்ல, மலேசியா, சிங்கப்பூர், கனடா, ஜேர்மன், இலண்டன், சுவிற்சர்லாந்து, நோர்வே போன்ற வெளிநாடுகளிலும் நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (01)

# இன்றைய சிறப்பு நிகழ்ச்சிகள்

### ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் சிறப்பு நிகழ்ச்சித் தொடரில் இன்று கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் "குறிஞ்சிக் குமரன்" என்ற பொருளில் சொற்பொழிவாற்றுகிறார்.

மாலை 3.00 மணிக்கு ஆரம்பமாகும் இன்றைய நிகழ்வின்போது தெல்லிப்பழை, பன்னாலை ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலை, நீர்வேலி காமாட்சி அம்மன் அறநெறிப் பாடசாலை மற்றும் ஊர்காவற்றுறை பருத்தியடைப்பு கதிரேசன் இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்ச்சிகளும் சிறப்பு அம்சங்களாக இடம்பெறவிருக்கின்றன. (க)

*************************************************

### துர்க்காதேவி மணி மண்டபத்தில்

நல்லூர் இளங்கலைஞர் மன்றம், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்து நடத்தும் தெய்வீக இசையரங்கு நிகழ்ச்சித் தொடரில் இன்று திருமதி தாரணி ராஜ்குமார் வழங்கும் இன்னிசை இடம்பெறுகிறது.

மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் இந்நிகழ்வின்போது செல்வி பாக்கியலட்சுமி நடராஜா (வயலின்) எஸ். கமலதாஸ் (மிருதங்கம்), ஆர். சிவராமன் (கடம்) ஆகியோர் பக்கவாத்தியம் வழங்குவார்கள். (க)

*************************************************

### நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில்

சைவத் தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடந்துவரும் தெய்வீகப் பேருரைத் தொடரில் இன்று மொழியும் வள்ளல் பராரதீஸ் "காதலென்றதுவும் ஓர் கள்ளியின் தோற்றமாம்" என்ற பொருளில் சொற்பொழிவாற்றுகிறார்.

மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்ச்சி சைவத் தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் அமைப்பாளர் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் தலைமையில் இடம்பெறும். (க)

# கடத்தப்பட்ட பிரெஞ்ச் நபர்கள் உயிருடன் உள்ளனர்: பரபரப்பான வீடியோ காட்சிகள் வெளியீடு

பிரான்சை சேர்ந்த ஐவரை மாலி மற்றும் அல்ஜீரியாவைச் சேர்ந்த அல்கொய்தா பிரிவினர், கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு கடத்திச் சென்றனர். தற்போது அவர்கள் உயிருடன் இருக்கும் வீடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

அந்த வீடியோவில் கடத்தப்பட்ட ஐந்து நபர்களையும் சுற்றி, ஆயுதம் ஏந்திய நபர்கள் நிற்கின்றனர்.

கடத்தப்பட்ட நபர்கள் கூறுகையில், தங்களை மீட்க வேண்டி சர்வதேச சமூகத்தினரிடம் வேண்டி கேட்டுக் கொண்டனர். மிக கடினமாக சூழ்நிலையில் தாங்கள் இருப்பதாக தெரிவித்தனர்.

இவர்களில் பிலிப் வெர்டோன் என்பவர் மூன்று மாதங்களாக தான் எவ்வித மருந்தும் உட்கொள்ளவில்லை என்ற தெரிவித்தார். வெர்டான் என்பவர், அல்கொய்தா மற்றும் அக்கிம் இயக்கத்தாருடன் பேச்சு வார்த்தை நடத்துமாறு கூறினர்.



இந்த வீடியோவை சகாரா தொலைக் காட்சி வெளியிட்டது. இந்த தொலைக் காட்சி, கடத்தப்பட்டவர்களின் நிலை யை வெளிப்படுத்தும் குறுந்தகடு முந்தைய ஜனாதிபதியான நிக்கோலஸ் சர்கோசியின் காலத்தில் அதாவது சில மாதங்களுக்கு முன்பு தயாரானது என்றனர்.

கடத்தப்பட்டவர்கள் தங்களைக் காப்பாற்றுமாறு வேண்டினாலும், அதற்கான முயற்சிகள் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# உலக பார்வை

# சிக்கன் வாங்கித் தராத தந்தையின் இடுப்பு எலும்பை உடைத்த மகன்



இங்கிலாந்தில் கே.எப்.சி சிக்கன் வாங்கி தராத தந்தையை மகன் அடித்து, அவரது இடுப்பு எலும்பை முறித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இங்கிலாந்து கவுன்ட்டி டர்ஹமில் உள்ள ஹார்ட்பூலைச் சேர்ந்தவர் டேவிட் (வயது 46). அவரது தந்தை நார்மன் பெல் (வயது 76).

அவர் தனது மகனுக்காக சூப்பர் மார்க்கெட் சென்று பொரித்த கோழிக்கறி வாங்கிச் சென்றார்.


பெல் தனது மனைவியுடன் பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்த போது, அந்த பக்கமாக வந்த டேவிட்டிடம் அவரது தாய் கோழிக்கறி வாங்கியிருப்பதை தெரிவித்தார்.

அதற்கு குடிகாரரான டேவிட் கே.எப்.சி சிக்கன் வாங்காமல் ஏதோவொரு சிக்கனை எப்படி வாங்கி வந்தீர்கள் என்று கூறி தந்தையை தனது தலையால் முட்ட வந்தார்.

அதில் இருந்து தப்பிக்க முயன்ற பெல் கீழே விழுந்தார். இதில் அவரது இடுப்பு எலும்பு முறிந்தது. இதையடுத்து அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு 11 நாட்கள் மருத்துவமனையில் இருந்தார்.

இதற்கிடையே டேவிட்டை பொலிசார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். ஆனால் தனது மகனை மன்னித்து விடுதலை செய்யுமாறு, தந்தை கேட்டுக் கொண்டதன் பேரில் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

# ஜேர்மனியில் ஒசாமா பின்லேடனின் மெய்க்காவலர்




சர்வதேச பயங்கரவாத இயக்கத்தின் தலைவரான ஒசாமா பின்லேடனின் மெய்க்காவலரில் ஒருவரான சமி பல ஆண்டுகளாக ஜேர்மனியில் வசித்து வருவது தற்போது தெரியவந்துள்ளது.

துனிசிய நாட்டைச் சேர்ந்த சமி கடந்த 8 ஆண்டுகளாக ஜேர்மனியில் வசித்து வருகிறார். இவர் மிகவும் ஆபத்தானவர் என காவல் துறையினர் கருதுகின்றனர், இவர் மீது பல்வேறு சந்தேகங்கள் இருந்தாலும், இவரைக் கைது செய்வதற்கான போதுமான ஆதாரங்கள் கிடைக்கப் பெறவில்லை.

WAZ என்ற ஜேர்மன் செய்தித்தாள் இவர், போர்ச்சும் மசூதிகளில் வைத்து இளைஞர் களை புனிதப் போரில் கலந்து கொள்ளவதற்காக தெரிவு செய்துள்ளார். இங்கு டுசெல் டோர்ஃப் அல்கொய்தா கிளை ஒன்றைத் தொடங்கியுள்ளார் என்றும் செய்தி வெளியிட்டுள்ளது.

டுசெல்டோர்ஃப் நீதிமன்றத்தில் வன்முறைத் தாக்குதல் நடத்த திட்டமிட்ட இளைஞர்கள் இருவர் மீது வழக்கு நடந்து வருகிறது. ஜேர்மனியில் கூட்டமாக மக்கள் கூடுமிடத்தில் கொத்துக் குண்டை வீசிக் கொல்ல இந்த இளைஞர்கள் திட்டமிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த இளைஞர்களை நியமனம் செய்ததில் சமிக்குப் பங்கு கிடையாது என்றும், அப்தெலாதீம் ஏல் - மு என்பவரே இந்த இரு இளைஞர்களையும் தெரிவு செய்ததாகவும் கூறி செய்தித் தொடர்பாளர் ஒருவர் இந்த வழக்கை திசை திருப்பி விட்டார்.



இலண்டன் ஒலிம்பிக் இறுதி நிகழ்வின் போது இலண்டன் நகரத்தின் கட்டடங்களின் நிலை தொகுப்பை காட்டும் ஒளிப்படம்.

# மியான்மர் கலவரத்தால் பாதிக்கப்பட்டுள்ள முஸ்லிம்களுக்கு உதவிகளை வழங்குகிறது சவுதி அரேபியா அரசு

மியான்மர் கலவரத்தால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு, 250 கோடி ரூபாய் பெறுமானமுள்ள உதவிகளை வழங்க சவுதி அரேபியா முன்வந்துள்ளது.

மியான்மர் நாட்டில் வங்கதேச எல்லையையொட்டி அமைந்துள்ள ரகின் மாகாணத்தில், கடந்த ஜூன் மாதம் முஸ்லிம்களுக்கும், புத்த மதத்தினருக்கும் இடையே கலவரம் மூண்டது.

ரகின் மாகாணத்தின் மூன்று மாவட்டங்களில் வங்கதேசத்திலிருந்து குடி பெயர்ந்த, எட்டு லட்சம் முஸ்லிம்கள் வசிக்கின்றனர்.

இவர்கள் மியான்மரில் குடியுரிமை கேட்டு போராடி வருகின்றனர். சட்ட விரோதமாகக் குடிபெயர்ந்தவர்களுக்கு, குடியுரிமை அளிக்க மியான்மர் அரசு மறுத்து விட்டது.

இதற்கிடையே கடந்த ஜூன் மாதம் முஸ்லிம்களின் குடிசைகளை தீ வைத்து கொளுத்தி விட்டதாகக் கூறி, பெரிய அளவில் கலவரம் மூண்டது. இதுவரை 50 பேர் பலியாகினர்.



இதையடுத்து மவுங்தா பகுதியில் அவசர நிலை அறிவிக்கப்பட்டது. பாதுகாப்பு கருதி ஏராளமான முஸ்லிம்கள் தங்கள் தாயகமான வங்கதேசத்துக்குள் தஞ்சம் அடைந்து வருகின்றனர்.

மியான் மரில் உள்ள முஸ்லிம்கள் அந்நாட்டு இராணுவத்தால் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாவதை இஸ்லாமிய கூட்டமைப்பு நாடுகள் கண்டித்துள்ளன.

இதற்கிடையே இந்த மாநாட்டின் உறுப்பினரான சவுதி அரேபியா கலவரத்தால் பாதிக்கப்பட்ட மியான்மர் முஸ்லிம்களுக்கு, 250 கோடி ரூபாய் பெறுமானமுள்ள உதவிகளை அறிவித்துள்ளது.

இந்த நிவாரணப் பொருட்களை உடனடியாக மியான்மருக்கு அனுப்ப, சவுதி மன்னர் அப்துல்லா உத்தரவிட்டுள்ளார்.

# உனக்கு82 எனக்கு40

82 வயதாகும் அமெரிக்கா கோடீஸ்வரர் ஜார்ஜ் சோரோஸ், தனது காதலியை மூன்றாவதாக திருமணம் செய்து கொண்டார்.



அமெரிக்காவை சேர்ந்த கோடீஸ்வரர் ஜார்ஜ் சோரோஸ் (வயது 82), இவர் ரூ.11/4 லட்சம் கோடி சொத்துகளுக்கு அதிபதியாவார்.

இவருக்கும், தாமிகோ போல்டான் (வயது 40) என்பவருக்கும் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு பழக்கம் ஏற்பட்டு காதலாக மலர்ந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் நியூயார்க் நகருக்கு அருகேயுள்ள பங்களாவில் பிறந்த நாள் கொண்டாடிய ஜார்ஜ் சோரோஸ், தனது காதலி தாமிகோ போல்டனுடன் திருமணம் நிச்சயம் செய்து கொண்டார். உறவினர்கள், நண்பர்கள் முன்னிலையில் இருவரும் மோதிரம் மாற்றி கொண்டார்கள்.இது கோடீசுவரருக்கு 3-வது திருமணம் ஆகும். ஏற்கனவே அவருக்கு 5 குழந்தைகள் இருக்கிறார்கள். அதுபோலவே தாமிகோவுக்கு 2-வது திருமணம் ஆகும். தற்போது இவர் இணையத்தளம் மூலம் யோகா பயிற்சி நடத்தும் தொழில் செய்து வருகிறார்.

# ஸ்பெயினில் பயங்கர காட்டுத் தீ: பாரம்பரிய சின்னங்கள் எரிந்து சாம்பல்

ஸ்பெயின் நாட்டின் கெனாரி தீவில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீயால் 4,000 பேர் வெளியேற்றப்பட்டு உள்ளனர்.

ஸ்பெயின் நாட்டில் இந்த ஆண்டு தொடக்கம் முதலே பல இடங்களில் காட்டுத் தீ பரவி 50 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் இருந்த தாவரங்கள் நாசமாயின.

இதற்கிடையே கெனாரி தீவில் உள்ள லா கொமெரா பகுதியில் கடந்த 4ஆம் திகதியிலிருந்து காட்டுத் தீ எரிந்து கொண்டிருக்கிறது.



இதனால் அப்பகுதிக்கு செல்லும் சாலைகள் மூடப்பட்டு விட்டன. காட்டுப் பகுதியில் குடியிருந்த 4,000 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

யுனெஸ்கோ அமைப்பால் பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்ட பகுதிகள் எல்லாம் இந்த காட்டுத் தீயில் நாசமாயின.

இதுவரை 3,000 ஹெக்டேர் பரப்பளவில் இருந்த காடுகள் தீயில் எரிந்து விட்டன. இதன் காரணமாக இப்பகுதியில் 104 டிகிரி பாரன்ஹீட் அளவுக்கு வெப்பம் அதிகரித்துள்ளது.

# புதுடெல்லி சட்டமன்ற தேர்தலில் போட்டியிட அன்னா ஹசாரே குழு முடிவு

புதுடெல்லி சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிட அன்னா ஹசாரே குழுவினர் முடிவு செய்துள்ளனர். நாட்டில் வலுவான லோக்பால் மசோதாவை அமல்படுத்தக் கோரி சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே உண்ணாவிரதம் மற்றும் தர்ணா போரட்டங்களை நடத்தி வருகின்றனர்.

கடந்த 25ம் திகதி ஹசாரே குழுவினர் தொடங்கிய உண்ணா விரதப் போராட்டத்தில் அரசியலில் களமிறங்குவது பற்றி அறிவித்தனர்.



இந்நிலையில் 2013ம் ஆண்டு டெல்லி சட்டமன்ற தேர்தலில் அன்னா குழுவினர் போட்டியிட உள்ளனர்.


நேற்று நடத்திய ஆலோசனைக்கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டதாக பி.டி.ஐ. செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் இமாச்சல், குஜராத் ஆகிய சில மாநிலங்களில் சட்டமன்ற தேர்தல் நடக்க உள்ளன. இதில் மாநிலங்களில் போட்டியிடுவது குறித்து முடிவு எடுக்கப்படவில்லை.

# சோதனைகளை துணிவுடன் எதிர்கொண்டு வெற்றி பெற வேண்டும்: அப்துல் கலாம்

தமிழ்நாடு, சென்னை ஈஞ்சம் பாக்கம் வேல்ஸ் பில்லபாங் சர்வ தேசப் பள்ளியில் நேருக்குநேர் என்ற நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கலாம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். அப்போது மாணவர்களக்கு பரிசு வழங்கி அவர் பேசியது: சாதனை படைக்க விரும்பும் மாணவர்கள் லட்சியம் ஒன்றை தெரிவு செய்து, அதை அடைவதற்கான முயற்சியில் தொடர்ந்து இடை விடாமல் கடுமையாக உழைக்க வேண்டும்.



அவ்வாறு உழைக்கும்போது எதிர் வரும் சிரமங்களையும், பிரச்சினைகளையும், சோதனைகளையும் துணிவுடன் எதிர்கொண்டு சமாளித்து வெற்றி பெற வேண்டும் என்றார்.

இதற்கு உதாரணமாக தன் வாழ்வில் நடைபெற்ற இரு சம்பவங்களை கலாம் தன் உரையில் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்.

இராமேசுவரத்தில் தனக்கு கல்வி போதித்த ஆசிரியர் சிவசுப்ரமணிய அய்யர், பறவை எவ்வாறு வானத்தில் பறக்கிறது என்பதை விளக்கிக் கூறி, எனது படைப்பாற்றல் திறனை மேம்படுத்த உதவியதால், படிப்படியாக ஏவுகணை பொறியாளராக, விண்வெளித்துறை தொழில்நுட்பப் பொறியாளராக தன்னால் உயர முடிந்தது என்றார்.

மற்றொரு ஆசிரியரான அய்யா துரை சாலமோன் வாழ்க்கையில் முன்னேற லட்சியம், அதை அடைந்தே தீருவேன் என்ற நம்பிக்கை, அந்த லட்சியத்தை அடைவதற்கான கடும் உழைப்பு ஆகியவை அவசியம் என்று வலியுறுத்தி வழிகாட்டினார்.

பெரும்பாலான ஆசிரியர்களைப் போன்று வகுப்பில் நன்கு படிக்கும் மாணவர்களை மட்டும் தெரிவு செய்து ஊக்குவிக்காமல் படிப்பில் பின்தங்கிய நிலையில் இருந்த மாணவர்களின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை செலுத்தினார்.

அவரைப்போன்று தற்போதுள்ள அனைத்து ஆசிரியர்களும் தங்களிடம் கல்வி பயிலும் மாணவர்கள் வாழ்வில் உயர்ந்த லட்சியத்துடன் முன்னேற உதவ வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

மாணவர்கள் தங்களது தனித்திறனை மேம்படுத்தி, சரித்திரத்தில் இடம்பெறும் வகையில் உழைத்து வாழ்வில் உயர வேண்டும் எனவும் கூறினார்.

# எனக்கெதிராக பொலிசார் செயல்படுகின்றனர்: வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி பரபரப்பு புகார்

என்னை மக்களுடன் நெருங்கி பழக விடாமல் பொலிசார் தடுக்கின்றனர், இது மனித உரிமை மீறலாகும் என்று வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி தெரிவித்துள்ளார்.

சந்தன கடத்தல் மன்னன் வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி திருக்கோவிலூர் அருகே உள்ள மணலூர்பேட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ள வந்திருந்தார்.

அப்போது அவர் கூறுகையில், கர்நாடக மாநில அரசு என் மீது தொடர்ந்த 5 வழக்கிலும் விடுதலையாகி விட்டேன். தமிழகத்தில் மட்டும் ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது. அதிலும் எனக்கு நீதி கிடைக்கும் என நம்புகின்றேன்.

காட்டில் என் கணவர் பதுக்கி வைத்து இருக்கும் பணத்தை எடுத்து புதிய கட்சி ஆரம்பிக்கப் போவதாக உளவுத் துறையினர் புரளியை கிளப்புகின்றனர். இது என்னை மற்றவர்களிடத்தில் இருந்து பிரிக்கும் செயல் ஆகும்.

நான் எந்த ஒரு கட்சியிலும் இணையப் போவதில்லை. புதிய கட்சியும் தொடங்கப் போவதில்லை. எனது கணவரை கொன்று விட்டு என்னை 5 வருடம் சிறையில் அடைத்தார்கள்.



அப்போது எந்த அரசியல் கட்சியனரும் எனக்கு எந்த உதவியும் செய்யவில்லை. ஆனால் எங்கள் குடும்பத்தின் மீது அக்கரை கொண்ட ஆதரவாளர்கள் முடிந்த அளவுக்கு உதவி செய்தனர்.

எனவே நான் இனி மக்கள் பணி செய்து காலத்தை கழிக்க விரும்புகின்றேன். எனது கணவர் வீரப்பன் படத்தை பா.ம.கவினர் பிரசுரிக்கக்கூடாது என திட்டவட்டமாக கூறிவிட்டேன். எனது கணவர் படத்தை அவர்கள் பிரசுரிப்பது கட்சியை வளர்க்கவும், அவர்களது சுயநலத்துக்காகவுமே ஆகும்.

இருந்தும் அவர் படத்தை பிரசுக்கின்றனர். இதனைக்கேட்டால் ஜாதி ரீதியாக உணர்வில் கட்சி தொண்டர்கள் பிரசுரிப்பதாக கூறுகின்றனர். அதேபோல் எனது கணவர் வாழ்க்கை வரலாற்றை கன்னடத்தில் படம் எடுத்தனர்.

அதனை தடுக்கும் வகையில் சென்னை குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளேன். என்னை ஏதேனும் விசேஷங்களுக்கு அழைக்க நினைப்பவர்களை பொலிசார் மிரட்டும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனது படத்தையும், எனது கணவர் படத்தையும் பிரசுரிப்பவர்களை சட்டத்துக்கு புறம்பானவர்கள் போல் சித்தரிக்கின்றனர்.

இதனால் என்னிடம் யாரும் நெருங்கி பழக யோசிக்கின்றனர். இன்னும் சொல்லப்போனால் மக்களிடத்தில் என்னை நெருங்க விடாமல் பொலிசார் பார்த்துக் கொள்கின்றனர். இது கூட ஒரு வகையான மனித உரிமை மீறலே ஆகும் என்று தெரிவித்துள்ளார்.

# இந்திய செய்திகள்

## சுதந்திர தினத்தில் வான் தாக்குதல் நடத்த லஷ்கர் அமைப்பு திட்டம்

இந்தியாவின் சுதந்திர தினமான ஓகஸ்ட் 15ம் திகதி அன்று விமானம் மூலம் தாக்குதல் நடத்த லஷ்கர்- இ - தொய்பா அமைப்பு திட்டமிட்டிருப்பதாக உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

சுதந்திர தினம் வருவதற்கு இன்னும் இரு தினங்களே உள்ள நிலையில் இந்த அறிவிப்பை உளவுத்துறை வெளியிட்டுள்ளது அதிர்ச்சியளிக்கிறது.

அகமதாபாத் விமான நிலையத்திலிருந்து விமானத்தை கடத்தி அதன் மூலம் தாக்குதல் நடத்த லஷ்கர்- இ- தொய்பா அமைப்பு திட்டமிட்டிப்பதாக உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளதையடுத்து அந்த விமான நிலையத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு, குஜராத் மாநிலம் சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச விமான நிலையத்திற்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

மேலும் புதுடெல்லி, மும்பை, கொல்கத்தா, சென்னை போன்ற பிரதான நகரங்களுக்கும் பொலிஸார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.



போக்குவரத்துக்கும், நோயாளிகளுக்கும் எந்த தொந்தரவும் இல்லாமல் மாநாடு நடக்க வேண்டும் என்று கோர்ட் அனுமதியளித்த பின், அதனை அவமதிக்கும் வகையில், போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தி, அவசரமாக செல்லவேண்டிய ஆம்புலன்சுக்கு வழி விடமால், போக்குவரத்து நெறிசல் ஏற்பட்டது. இதில் சிக்கிய ஆம்புலன்ஸ் வட்டமிட்டு காட்டப்பட்டுள்ளது.


## நாக்கை கடித்து பேசியது எதற்காக? விஜயகாந்த் விளக்கம்

எதிர்கட்சித்தலைவர் விஜயகாந்த், சட்டப்பேரவையில் நாக்கை கடித்து பேசியது குறித்து விளக்கமளித்துள்ளார்.

கடந்த சட்டசபை தேர்தலில் அதிமுக- தேமுதிக கூட்டணி வைத்தது தமிழக அரசியலில் புதிய மாற்றம் வருமென பொதுமக்கள் நினைத்திருந்தனர்.

இந்த கூட்டணி சில மாதங்களுக்கு முன்பு, வெடித்துச் சிதறியது. சட்டப்பேரவை விவாதத்தின் போது அதிமுக உறுப்பனர் ஒருவரை விஜயகாந்த் நாக்கை கடித்து ஒரு மாதிரியாக பேச முதல்வர் ஜெயலலிதா இனி தேமுதிகவிற்கு இறங்குமுகம்தான் என கடுமையாக சாடினார்.

இந்த கோபத்திற்கு என்ன காரணமென எதிர்கட்சி தலைவர் விஜயகாந்த் பதிலளித்துள்ளார்.



தஞ்சாவூரில் நடந்த விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்கள் வழங்கும் விழாவில் பேசிய விஜயகாந்த், தனது கட்சியைப்பற்றி தவறாக பேசிய காரணத்தினாலேயே கோபப்பட்டேன் என தெரிவித்திருக்கிறார்.

மேலும் விவசாயிகளுக்கு தடையின்றி மின்சாரம் வழங்க வேண்டுமெனவும் தமிழ்நாட்டில் நிலவும் தண்ணீர் பிரச்சினைக்கு முதல்வர் ஜெயலலிதாவே காரணம் என்றும் குற்றம்சாட்டியுள்ளார்.

தமிழகத்தில் உரத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த விஜயகாந்த், அதற்கான முறையான நடவடிக்கைகளை எடுக்க திமுக அமைச்சர் மு.க.அழகிரி பயப்படுகிறார் எனவும் விஜயகாந்த் பேசினார்.

# இலங்கை கிரிக்கெட்டில் ஊழல் விசாரணைக்கு வருகிறது ஐ.சி.சி


இலங்கை கிரிக்கெட்டில் இடம்பெறுகின்ற ஊழல் மோசடிகள் குறித்து, சர்வதேச கிரிக்கெட் சபை விசாரணை நடத்தவுள்ளது.

இதற்காக சர்வதேச கிரிக்கெட் சபையின் ஊழலுக்கு எதிரான சிறப்புக்குழுவின் பிரதிநிதிகள் இருவர், இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கிரிக்கெட் மீதான ஊழல் முறைகேடுகள் அதிகரித்துள்ள நிலையில், இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் இலங்கை கிரிக்கெட்டின் செயற்பாடுகளை பதிவு செய்யும் பொறுப்பு, இலங்கையில் உள்ள ஊடக நிலையம் ஒன்றுக்கு வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

தற்போது எஸ்.எல்.பி.எல். போட்டிகள் நடைபெறுகின்ற நிலையில், இந்த போட்டிகளில் ஊழல் நடைபெறாதிருக்கும் வகையில், விசாரணைக்குழு மேற்பார்வை செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தென்னாபிரிக்கா-இங்கிலாந்து டெஸ்ட்: பீற்றர்சன் அணியில் இருந்து நீக்கம்



இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் இருந்து முன்னணி துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சன் நீக்கப்பட்டுள்ளார்.

இதனால் தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் அவர் பங்கேற்கமாட்டார்.

டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தை தக்கவைத்துக் கொள்ளவும், இத்தொடரை சமன் செய்யவும் இந்த டெஸ்ட் போட்டியை வென்றாக வேண்டிய கட்டாயத்தில் இங்கிலாந்து உள்ளது. இந்நிலையில் பீற்றர்சன் நீக்கப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

முன்னதாக 2-வது டெஸ்ட் போட்டியின் போது தென்னாபிரிக்க வீரர்கள் சிலருக்கு பீற்றர் சன் எஸ்.எம்.எஸ் அனுப்பினார் என்றும், அதில் இங்கிலாந்து அணித்தலைவர் ஆண்ட்ரூ ஸ்ரோஸ், பயிற்சியாளர் அண்ரி பிளவர் ஆகியோர் குறித்து தரக் குறைவாக. கூறியிருந்ததாகவும் தெரிகிறது. இதன் அடிப்படையிலேயே பீற்றர்சன் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

# மின்னொளியின் கரப்பந்தாட்டம்: ஆவரங்கால் இந்து சம்பியன்

வலிகாமம்

நீண்ட போராட்டத்தின் பின்னர் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் வட மாகாண கரப்பந்தாட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

கைதடி மின்னொளி விளையாட்டுக் கழகம் வட மாகாண கரப்பந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகமும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் மின்னொளி விளையாட்டுக் கழக மைதானத்தில் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்றதுடன் இறுதி வரை போட்டியின் போக்கை தீர்மானிக்கமுடியாத நிலமை பார்வையாளர்களை திகைப்படையச் செய்தது.

ஐந்து சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் சுற்றை இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் 25:23 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற இரண்டாம் சுற்றை கலைமதி விளையாட்டுக் கழகம் 25:23 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்து.

மூன்றாம் சுற்றை மீண்டும் இந்து இளைஞர் விளையாட் டுக்கழகம் 25:20 புள்ளிகள் என வெற்றி பெற நான்காம் சுற்றை மீண்டும் கலைமதி விளையாட் டுக் கழகம் 26:24 புள்ளிகள் என்ற அடிப்படையில வெற்றி பெற்றது.

ஐந்தாம் சுற்றை வெற்றி கொள்ளப்போவது யார் எந்த அணி என பதட்டமான நிலையில் காணப்பட்ட வேளையில் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் மிகவும் அவதானத்துடன் விளையாடி கிடைத்த பந்துகளை புள்ளிகளாக மாற்றிய நிலையில் 15:11 புள்ளிகள் என்ற அடிப்படையில கலைமதி விளையாட்டுக்கழகத்தை வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைப் தனதாக்கிக் கொணடது.

# மாகாணங்களின் உதைபந்தாட்டம்: வடமாகாணம் இறுதிக்குத் தகுதி

வலிகாமம்

இலங்கை விளையாட:டு அமைச்சினால் மாகாண அணிகளுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி இறுதிப் போட்டியில் விளையாட வட மாகாண அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு ஆப்பிசி மைதானத்தில் இடம்பெற்ற போட்டிகளில் வட மாகாண அணி தன்னை எதிர்த்து விளையாடிய இரு போட்டிகளிலும் வெற்றி பெற்றதைத் தொடர்நது இறுதிப் போட்டியில் விளையாட தகுதி பெற்றுளள்து.


சனிக்கிழமை இடம்பெற்ற போட் டிகளில் வட மாகாண அணி தன்னை எதிர்த்து முதல் போட் டியில் விளையாடிய ஊவா மாகாண அணியுடன் மோதிக கொண்டதில் 02:01 கோல்கள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

இரண்டாம் சுற்றில் இடம் பெற்ற அரையிறுதி போட்டியில் மேல் மாகாண அணியுடன் மோதிக் கொண்டது.

இரு அணிகளும் மிகவும் பலம் வாய்ந்த அணிகளாக காணப்பட்ட போதிலும் வட மாகாண அணி வீரன் தனக்க கிடைத்த ஓர் பந்தை உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டதைத் தொடர்ந்து ஒரு கோலைப் பெற்று முன் னிலையில் காணப்பட்டது.

தொடர்நது இரு அணிகளும் கோல் பெற எடுத்த முயற்சி பயனளிக்காத நிலையில் வட மாகாண அணி 01:00 என்ற கோல் கணககில் மேல் மாகாண அணியை வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் விளையாட தகுதி பெற்றது.

# அணியின் தலைமைக்காக இல்லை திறமைக்காகத்தான் -கௌதம் கம்பீர்



உப அணித்தலைமைக்காகத்தான் இந்திய அணியில் இடம் பெறவில்லை என இந்திய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் கௌதம் கம்பீர் தெரிவித்துள்ளார். இந்தியாவின் உலகக்கிண்ண ருவென்ரி-20 தொடருக்கான அணியின் உப தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளமை தொடர்பாகவே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் உப அணித்தலைவராக நீண்ட காலங்கள் செயற்பட்ட கௌதம் கம்பீர், அண்மையில் ஆசியக் கிண்ணத் தொடருக்கான இந்திய அணியின் உப தலைவராக விராட் கோஹ்லி அறிவிக்கப்பட்டார். அதன் பின்னர் இலங்கைத் தொடருக்கும் விராட் கோஹ்லியே உப தலைவராகவேக் காணப்பட்டார்.

இந்நிலையில் மீண்டும் உப அணித்தலைமை கிடைக்கப் பெற்றமை குறித்துக் கேட்கப்பட்டமைக்கு, இந்திய அணியில் ஓட்டங்களைக் குவித்து அணியை வெற்றிபெறச் செய்யவே தான் காணப்படுவதாகவும், உப அணித்தலைமைப் பதவிக்காக இல்லை எனவும், தனது ஒரே பணி ஓட்டங்கள் குவிப்பதே எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியில் யுவராஜ் சிங் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளமையை வரவேற்பதாகத் தெரிவித்த கௌதம் கம்பீர், அவர் அணியில் இடம்பெறுவது மிக மகிழ்ச்சி யளிப்பதாகவும், அவர் போட்டி களை வென்று கொடுக்கக்கூடிய வீரர் எனவும் தெரிவித்தார். யுவராஜ் சிங் மீண்டும் அணி யில் இடம்பெற்றுள்ளமை குறித்து ஒட்டுமொத்த அணியும் மகிழ்ச்சி யுடன் காணப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அணியின் வெற்றிக்குத் தனிநபர் ஒருவர் காணப்பட மாட்டார் எனத் தெரிவித்த அவர், கிரிக்கெட் என்பது அனைவரும் இணைந்து விளையாடும் குழு விளையாட்டு எனவும், அனைவரது சேர்ந்த திறமை வெளிப்பாடுகளே அணியை வெற்றிப்பாதைக்கு இட்டுச் செல்லும் எனவும் தெரிவித்தார்.

# எஸ்.எல்.பி.எல் ருவென்ரி–20 வயம்பவுக்கு இலகு வெற்றி

ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் தொடரின் 3ஆவது போட்டியில் வயம்ப யுனைட்டட் அணி இலகுவான வெற்றியைப் பெற்றுக் கொண்டுள்ளது. உத்துர ருத்ராஸ் அணிக்கெதிரான இப்போட்டியில் வயம்ப யுனைட்டட் அணி 9 விக்கெட்டுக்களால் இலகுவாக வெற்றிபெற்றது.

கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற வயம்ப யுனைட்டட் அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன தங்கள் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடும் எனத் தெரிவித்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய உத்துர ருத்ராஸ் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றது. முதலாவது விக்கெட்டுக்காக 6 ஓவர்களில் 68 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, தொடர்ச்சியாக அதிரடியாக ஆடிச் சிறப்பான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் உத்துர ருத்ராஸ் அணி சார்பாக இம்ரான் பர்ஹத் 22 பந்துகளில் 51 ஓட்டங்களையும், சாமர கப்புக்கெதர 24 பந்துகளில் 38 ஓட்டங்களையும், பர்வேஸ் மஹரூப் 16 பந்துகளில் 28 ஓட்டங்களையும், மஹேல உடவத்த 31 பந்துகளில் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் வயம்ப யுனைட்டட் அணி சார்பாக இசுரு உதான 38 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுககளையும், செஹ்ஹான் ஜெயசூரிய, அப்துல் ரஷாக், மிலிந்த சிரிவர்தன ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

180 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய வயம்ப யுனைட்டட் அணி 19.2 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. ஆரம்பம் முதலே அதிரடியாக ஆடிய அவ்வணி முதலாவது விக்கெட்டுக்காக 176 ஓட்டங்களைப் பகிர்ந்தது.

துடுப்பாட்டத்தில் வயம்ப யுனைட்டட் அணி சார்பாக தமிம் இக்பால் ஆட்டமிழக்காமல் 61 பந்துகளில் 93 ஓட்டங்களையும், கம்ரன் அக்மல் 55 பந்துகளில் 79 ஓட்டங்களையும் கைப்பற்றினர்.

வீழ்த்தப்பட்ட ஒரேயொரு விக்கெட்டை கெவோன் கூப்பர் கைப்பற்றிய அதேவேளை, போட்டியின் நாயகனாக தமிம் இக்பால் தெரிவானார்.



ஆசியா நாடுகளின் வலைப்பந்தாட்டப் போட்டி கொழும்பில் நடைபெறுவதையிட்டு மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக இலங்கை வலைப்பந்தாட்ட சங்கத்தினால் வலைப்பந்தாட்டப்பந்து கிராமம் கிராமமாக கொண்டு செல்லப்படுவதுடன் பயிற்சி முகாம்களும் நடைபெற்று வருகின்றன. கிளிநொச்சிக்கு எடுத்துவரப்பட்ட வலைப்பந்தாட்டப் பந்தை கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஸ்ரீநிவாசன் வரவேற்பதையும் அதில் கையொப்பம் ஈடுவதையும் படத்தில் காணலாம். (வலிகாமம் நிருபர்)

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 14.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது